விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, ஐப்பசி 16 உ. சனி (1-11-69) ஷைபான் 20 புத்தகம் 23 இதழ் 51




## இந்துப் பல்கலைக்கழக கூச்சலைக் கிளப்பி

# தமிழ் இனத்தைத் துண்டாடாதே!



## தமிழ் காங்கிரஸ் தலைவருக்கு மகஜர்!

'தமிழ் பேசும் மக்களை மதவாரியாக பிளவுபடுத்தக் கூடிய ஆபத்து வாய்ந்த உங்கள் கட்சியின் இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கையை தமிழ் பேசும் இனத்தின் தேசிய நலனை உத்தேசித்து கைவிடுங்கள். வடக்கு, கிழக்கு என்ற பிரதேச வேறுபாடுகளுக்கும் இந்து, இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்ற பேதங்களுக்கும் துளியும் இடந்தராத முறையில் தமிழ் பேசும் மக்களுக்கு என ஓர் பொதுப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து உழைக்க முன் வாருங்கள்'

—இவ்வாறு கூறும் மகஜர் ஒன்று வடபகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் பொது மக்களின் கையொப்பங்களுடன் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத் தொகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் பலர் முன்னின்று பொதுமக்களிடம் கையெழுத்து சேகரித்து திரு. பொன்னம்பலத்துக்கு அனுப்பி வைத்துள்ள இந்த மகஜர் கூறுவதாவது:—

'நீங்கள் இந்துப் பல்கலைக் கழகம் வேண்டுமெனவும், இப்பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் தான் நிறுவப்பட வேண்டுமெனவும் வற்புறுத்தி வருகிறீர்கள். 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு பொதுவான பூரணத்துவமுள்ள பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை சமர்ப்பித்திருந்த போது, நீங்களும் உங்களது கட்சியை சேர்ந்த ஒரு பா. உ. க்களும் அதை எதிர்த்து இந்துப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டுமென்று கோரினீர்கள்: இதனால் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் கிடைக்கும் வாய்ப்பு பாதிக்கப்பட்டு விட்டது.

இது ஒரு புறமிருக்க, யாழ்ப்பாணத்தில் இந்து பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்றும் உங்கள் கோரிக்கையால் தெரிந்தோ தெரியாமலோ தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மதப் பூசலும் பிரதேச வேறுபாடுகளும் வளர இடமளிக்கிறீர்கள். பிரதேச, மத வேறுபாடுகளின்றி ஒன்று பட்டிருக்கும்

(9ம் பக்கம் பார்க்க)

## ஆர். ஜீ. வாக்களிக்க வராதது ஏன்?

'சிறுபான்மைத் தமிழர்கள் சிங்களவர்கள். ஆகையால் செனட் தேர்தலில் சிறுபான்மைத் தமிழ்ப் பிரமுகரான திரு. இராசலிங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் போகிறேன்' என்று கூறிக் கொண்டிருந்த திரு. ஆர். ஜீ. சேனநாயகா இறுதி நேரத்தில் சபைக்கு வராமலும் வாக்களிக்காமலும் இருந்ததேன் என்ற கேள்விக்கு இப்

(9ம் பக்கம் பார்க்க)

## துரைரத்தினம் சொன்ன புழுகன் கதை!

சாவகச்சேரியில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடும் திரு. வே. குமாரசாமி இப்பொழுது தினமும் பாராளுமன்றப் படிக்கட்டுகளைத் தாண்டி தேநீர்ச் சாலைக்குச் சென்று சாவகச்சேரித் தொகுதியில் தனது வெற்றி பற்றிப் பலருடனும் பேசிப் புழுகி வருகிறாராம்.



அண்மையில் பாராளுமன்ற தேநீர்ச்சாலையில் பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினத்திடம் திரு. வே. குமாரசுவாமி 'சாவகச்சேரித் தொகுதியில் நான் இம்முறை 18,000 வாக்குகளால் வெல்லுவேன்' என்று கூறினாராம்.

அதற்கு திரு. துரைரத்தினம் 'நான் உதை நம்புகிறேன்' என்று தனது வழமையான தலையாட்டத்துடன் சொல்லிவிட்டு, 'உலகில் மிகப் பெரும் பொய்யனுக்குப் போட்டியேற்பட்ட போது இறுதிக் கட்டத்தில் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் போட்டியிட்டார்கள். அதில் ஒருவன் 'உலகத்திலுள்ள திரவியங்கள் அத்தனையும் எனக்கே சொந்தம்' என்றான். உடனே மற்றவன் 'அதை நான் நம்புகிறேன்' என்று பதில் கூறினான். இறுதியில் நம்பியவனுக்கே முதலிடம் கிடைத்தது என்று விளக்கமளித்தார்.

இதைத் திரு. துரைரத்தினம் சொல்லி முடித்ததும் குமாரசாமி இருந்த இடம் தெரியாமலே எழும்பிச் சென்று விட்டாராம்!

## தமிழுரிமையை நிலைநாட்ட சட்ட நடவடிக்கை?

அரசாங்கத்துக்கு தமிழில் கடிதம் எழுதி தமிழில் பதில் பெறும் உரிமையை 1966ம் ஆண்டில் தமிழ் மொழிச்சட்ட பிரமாணங்களும் அதன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையும் தமிழ் மக்களுக்கு வழங்கியிருந்தும், அவ்வுரிமையைக்கூட இன்று பறிமுதல் செய்ய துணிந்திருக்கும் ஆட்சியாளரின் ஆணவப்போக்குக்கு எதிராகவும், தமிழுரிமையை நிலைநாட்டவும் தமிழரசுக் கட்சி சட்ட நடவடிக்கையொன்றில் குதிக்கலாமென்று தெரிகிறது. இப்பிரச்சினையில் கட்சி ஏதாவது நடவடிக்கை எடுத்தேயாகவேண்டுமெனப் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. தலைமைப்பீடத்தை வற்புறுத்தி வருவதாக அறியப்படுகிறது.

தமிழ்க்கடிதத்துக்கு தமிழில் பதில் அனுப்பப்பட வேண்டுமென்று தமிழ் மொழிப் பிரமாணங்கள் திட்டவட்டமாக தெரிவிக்கும் போது அரசாங்கம் தமிழ்க்கடிதத்துக்கு சிங்களத்தில் அதிகாரபூர்வமான பதிலும், தமிழில் கையெழுத்திட்டு உறுதிப்படுத்தப்படாத அதன் மொழி பெயர்ப்பும் சேர்த்து அனுப்பி வருவது சட்டத்தை மீறுவதாகுமென்று கருதப்படுகிறது.

இதன் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்று தமிழரசுக் கட்சி இப்போது ஆலோசித்து வருகிறது!

(9ம் பக்கம் பார்க்க)

## வி. நவரத்தினத்தின் முக மூடி கிழிகிறது!

### தமிழ் காங்கிரசுக்கு ஆதரவாக ஊர்தோறும் பிரச்சாரம்!

தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேறி சுயாட்சிக் கழகம் அமைத்துள்ள ஊர்காவற்றுறை பா. உ. திரு. வி. நவரத்தினத்தின் முக மூடி கிழிய ஆரம்பித்திருக்கிறது.

தன் மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப்பிழை ஏற்படவேண்டுமென்று ஆசைப்பட்ட பொருமை பிடித்தவன் போல-'எனதுகட்சிக்கு அடுத்த தேர்தலில் வாக்களிக்காவிட்டாலும் பரவாயில்லை; தமிழரசுக்கட்சிக்கு மட்டும் போடாதீர்கள்; தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரியுங்கள்; அவர்கள் பல்கலைக் கழகம் போன்ற தனி உதவிகளையாவது பெற்றுத்தருவார்கள்'!

(9ம் பக்கம் பார்க்க)

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அத்தியாயம் (9)

ஒரு வரைப் போல மற்றவர்களையும் எடைபோடும் பழக்கம் எம்மவருள் அனேகருக்கு உண்டு. வழக்கறிஞர்கள் பெரும்பாலும் ஒன்றுக்கு ஒன்று உதாரணம் காட்டி நிரூபிப்பதிலும், இல்லாததை உண்டென்று வாதிடுவதிலும் கைவந்த கலைஞர்கள். அதேவேளை அவர்களை அவர்கள் எல்லைத்துக்குப் போகவிட்டால் விபரீதம் ஏற்பட்டுவிடும் என்பதை நன்கு உணர்ந்தவள் புனிதம். தவறான கருத்துடன் பேசும் அண்ணனை ஓர் அதட்டலுடன் நிறுத்திவிட்டாள்.

''புனிதம்...நீ...''.

''நீங்கள் கூறும் வாதம் கோட்டில ஏற்கக்கூடியதாயினும். இங்கு என்னால் ஏற்க முடியாது.' ஒருவனைப் போலவோ, ஒருத்தியைப் போலவோ எல்லோரும் இருப்பார்கள் என்று நீங்கள் நினைப்பது தவறு அண்ணா. இனிப்புள்ள இடத்தைச் சுற்றி எறும்பு ஊரத்தான் செய்யும். இனிப்பு வைக்கப்பட்டுள்ள போத்தலோ அன்றி வேறு பொருளோ இறுக்கமாகவும், தற்காப்பாகவும் இருந்து விட்டால் எறும்பால் என்ன செய்ய முடியும்? எல்லாம் அவரவர் மன இயல்பைப் பொறுத்தது அண்ணா'' என்றாள்.

''அடேயப்பா இனம் இனத்தை நாடும் என்பது எவ்வளவு பெரிய உண்மை. அம்மையாரே, புனிதமான அம்மையாரே நான் இனி இப்படிக் கூறமாட்டேன் என்னை மன்னித்து விடம்மா'' என்றான் கேலியாக.

''அண்ணா'' என்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''புனிதம் உன்னைப்போல ஒரு தங்கைக்கு அண்ணனாக இருக்க நான எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்'' என்று அவள் முதுகை வருடி விட்டான்.

அவன் பெரிய கிறிமினல் வழக்கறிஞனாயிருந்தாலும் தன் அண்ணன் என்பதை நினைத்தபோது பெருமையாகவும், மகிழ்ச்சியாகவுமிருந்தது புனிதத்திற்கு அதே வேளையில் அவள் உள்ளத்தில் சுகுணாவும் பிரகாசும் தோன்றினர்.

கீழ் வானில் கதிரவன் தங்க முலாம் பூசி பவனிவர ஆரம்பிக்கும் வேளையில் புனிதம் எழுந்து குளித்துவிட்டு நல்ல ஆடைகளும் அணிந்து கொண்டு பூசை அறைக்குள் சென்றாள். அவள் எழுந்ததைப் பார்த்ததும் இரவு பூராவும் இன்பக் கனவு கண்டுகொண்டே படுத்துக் கிடந்த பாஸ்கரும் எழுந்து விட்டான்.

அன்று எட்டு மணியளவில் பிரகாஷ் வீட்டு வாசலில் வந்து நின்றது பாஸ்கருடைய கார். அதிலிருந்து முதலில் இறங்கியவள் புனிதம் தான்.

காரச் சத்தம் கேட்டு வாசலுக்கு ஓடிவந்த பிரகாஷ் காரிலிருந்து இறங்கிய புனிதத்தை வரவேற்றுக் கொண்டே காரிலிருந்த பாஸ்கரரையும் உள்ளே வரும்படி அழைத்தான்.

அவர்களிருவரும் உள்ளே வந்து அமர்ந்ததும் தங்கையை அழைத்தான் பிரகாஷ். அவள் சமயலறையில் இருந்தபடியால் வாசலில் கார்வந்து நின்றதோ அங்கு ஆட்கள் வந்ததோ அவளுக்குத் தெரியாது. ''என்னண்ணா இங்கே நான் கையில்...'' என்று அண்ணனுடன் செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

அவர்களுடைய அன்பான வாழ்வைக் கண்டும், கேட்டும் உணர்ந்து கொண்ட பாஸ்கருடைய உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது.

உள்ளே சென்று விடயத்தைக் கூறி அவளை அழைத்து வர விரும்பி புறப்பட்ட பிரகாஷை தடுத்து நிறுத்திய புனிதம் அழகான விழிகளால் சைகை செய்தாள். அவளுடைய சைகையை உணர்ந்து கொண்டான் பிரகாஷ்.

''சுகுணா... சுகுணா... இங்கே வந்து யார் யார் வந்திருக்கிறது என்று பாரேன்'' என்றான்.

ஒருபோதும் இல்லாதவாறு அன்று, அப்படி அழைத்த அண்ணனுடைய குரலைக் கேட்டு வெளியே வந்த சுகுணா திகைத்துவிட்டாள்.

அங்கேயிருந்தவன் நிட்சயமாக புனிதத்தின் அண்ணாகத்தானிருக்க வேண்டுமென்பதை அவன் உணர்ந்து கொண்டாள். புனிதத்தின் முகச்சாயல் கூட அவனிடமிருந்ததை அந்த ஒரு விநாடிக்கிடையில் கண்டு கொண்டு விட்டாள். உடனேயே கதவுக்குப் பின் சென்று ஒழித்துக் கொண்டாள்.

அவளுடைய நிலையைப் புரிந்து கொண்ட புனிதம் தன்னுள் சிரித்துக் கொண்டாள். 'சுகுணா தேனீர் கொண்டு வாரும்' என்றாள் புனிதம்.

சுகுணா துள்ளிக் குதித்து சமயலறைக்குள் ஓடினாள். அவள் உள்ளத்தில் ஒரே பரபரப்பு ஒன்றும் பேசாமல், அறிவிக்காமல் புனிதம் தன் அண்ணனை அழைத்துக் கொண்டு வந்து அவளை ஆச்சரியத்திலாழ்த்தி விட்டாள்.

வருடம் ஒன்று கழித்து பிரகாசின் தாயாருடைய ஆண்டுத் திதி கூட முடிந்து விட்டது. சுகுணா பாஸ்கர் திருமணம் நிட்சயமாகி திகதியும் குறிப்பிட்டாயிற்று.

இடையிடையே எத்தனையோ நிகழ்ச்சிகள்—ஆயிரம் ஆயிரம் வார்த்தைகளில் வடித்து வைக்க வேண்டிய இசை ரச நிகழ்ச்சிகள். இனிய பனி நினைவுகள்.' உணர்சிப் போராட்டங்கள்.-

அன்று மாலையில் கீதாவும் பிரகாசும் சந்தித்தனர் அவர்களிடையே எத்தனையோ எண்ணக் கனவுகள் ஒன்றை ஒன்று முட்டி மோதின. அடக்கியாள முடியாத உணர்வுகளுடன் போராடும் கீதா தன் உடல் உணர்ச்சிகளை அவனைப் பொறுத்தமட்டில் கட்டியாளப் பழகிக் கொண்டாள் என்றால் அதற்கு அவனு[illegible] வைத்திருந்த தீரா அன்பு தான் காரணம். அவள் உடலில் கிளர்ந்து எழுந்த அக்கினி உணர்வுகள் அவனுடைய அன்புப் பனியில் நனைந்து குளிர்ந்து அடங்கிவிடும்.

நமது தொடர்கதை

'அத்தான்.'

'ம்.

'எங்கள் திருமணத்துக்காக நான் அவசரப்படவில்லை!

ஆனால்......'

'என்ன ஆனால்?'

'சுகுணாவுக்குத் திருமணமான பின்பு .....'

'திருமணமான பின்பு......'

'நீங்கள் என்னத்தான்' சொல்வதற்கெல்லாம் ... ...?

'சொல்வதற்கெல்லாம் ...'

'போங்க இனி நான் பேசமாட்டேன்' என்று பொய்க் கோபத்துடன் கூறிவிட்டு திரும்பிக் கொண்டாள்.

'கோபமா கீதா?' அவள் தோள்களைப் பற்றினான்.

'விடுங்கள்' என்று நகர்ந்து இருந்தாள்.

'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி. என் காதலியே தவறேது செய்தேன் பிரியராதே' என்று அவன் பாடிய போது அவளால் மேலும் கோபமாக நடிக்க முடியவில்லை. சிரித்து விட்டாள்.

'கோபக்காரி நான் பாடினால் ஏன் சிரிக்க வேண்டுமாம்.'

'உங்கள் பாட்டைக் கேட்ட பின்பு நான் உண்மையில் கோபித்திருந்தால் கூட மாறிவிட்டிருப்பேன். எவ்வளவு நல்லா பாடுகின்றீர்கள் தெரியுமா?'

'அடேயப்பா. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே'

'ஏன் அப்படிச் சொலகிறீர்கள்'

'நான் கழுதையாட்டம் கத்தினால் கூட நீ நல்லாயிருக்கென்று தானே சொல்வாய்'

'போங்கத்தான்'

'எங்கேங்க' என்று கூறி அவளை இழுத்து மடிமீது படுக்க வைத்தான்.

'மடிமீது தலைவைத்து, என்று தொடங்கினாள்.

'விடியும் வரை தூங்குவோம் என்று சினிமா டுயட் பாடுவோமா?' என்று கூறிவிட்டு அவளைத் தூக்கி விட்டான்.

'அண்ணா என்று அழைத்துக்கொண்டே சுகுணா தேனீருடன் உள்ளே நுழைந்ததும் அவர்களது ஆனந்த ஆட்டமெல்லாம் அப்படியே ஓய்ந்து விட்டது.

மறுநாட்காலை விடிந்த போது புனிதத்தின் மனதில் ஓர் மறுமலர்ச்சி தனக்கு முன்பே பிரகாஷிற்கு திருமணம் நடக்க வேண்டும் என்ற ஓர் எண்ணம் அவள் இதயத்தில் உருவானது.

அவளுடைய கணவன் திருமணப் பதிவு நடந்த இரண்டாவது மாதமே உபகாரச் சம்பளம் பெற்று இரண்டு வருடப் படிப்புக்காக லண்டனுக்குச் சென்று விட்டான். ஆகவே அவளுடைய திருமணம் தடைப்பட்டுவிட்டது.

தன்னுடைய திருமணம் நாட்சென்றாலும் பரவாயில்லை என எண்ணிய அவள் மனதில் பிரகாஷை மணக் கோலத்தில் காண விழைந்தது மனம்.

அன்று கல்லூரி லீவு, ஆகவே காலை உணவை முடித்துக் கொண்டு பிரகாஷ் வீட்டிற்குச் சென்றாள் புனிதம்.

அவள் பிரகாஷ் வீட்டிற்குச் சென்ற சமயம் பிரகாஷ் தன் ஆபீஸ் அறையிலிருந்து புத்தகம் ஒன்றைப படித்துக் கொண்டிருந்தான்.

'மிஸ்டர் பிரகாஷ் உள்ளே வரலாமா'?

'ஓ... வாருங்கள். நீங்கள் தான் புனிதமாச்சே எங்கேயும் அனுமதியின்றி நுழையலாம்' என்றான் பிரகாஷ்.

'என்ன படித்துக் கொண்டிருக்கிறீர்கள். நானும் தெரிந்து கொள்ளலாமோ?

'நீங்களும் நானும் தெரிந்து கொள்ளும் விடயமல்ல. யாவரும் படித்தறிய வேண்டிய ஒரு பாடல். புறநானூற்றில் படித்துக் கொண்டிருக்கிறேன.'

'அதைத்தான் சொல்லுங்களேன்.'

'அதாவது 'நன்றும் தீதும் பிறர் தர வாரா' என்ற அடிப்படையையே திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருக்கின்றேன். எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பு நமது தமிழ் புலவன் கூறிய தத்துவம். இந்தக் காலத்து மக்கள் இந்த அடியின் உண்மைகளை உணர்ந்து கொண்டால் சண்டை சச்சரவு இன்றி எல்லோரும் ஒற்றுமையாய், அன்பாய் வாழமுடியும். புனிதம் இதுபற்றி நீங்கள்...' என்று நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

அவளுடைய அழகு நயனங்களில் நீர் பனித்து தழும்பின.

'புனிதம்! புனிதம்! வட் வட் ஹப்பின்ட்.'

'நதிங் மிஸ்டர் பிரகாஷ்' என்று கூறிவிட்டு மீண்டும் 'புறநானூறு வாக்கியம்என் உள்ளத்தைத் தொட்டு விட்டது' என்றாள்.

'நீங்கள் ஏதும் தவறாக...'

'இல்லை, இல்லை, என்று கூறியவள் 'பிரகாஷ் உங்களிடம் ஒன்று கேட்கலாம்என்று எண்ணித்தான் காலையில் இங்கு வந்தேன்' என்றாள் புனிதம்.

என்னிடமா? என்னவிடயமாக? புதிர் போடாமல் நேரடியாக விஷயத்தில் குதியுங்கள்' என்றான்.

'கல்யாண விடயமாக...'

(10ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப்பாருங்கள்?

திருவாளர் குயுக்தி !!!

தமிழரசுச் செல்வன்,
வவுனியா.

கே: இன்று தமிழ் மக்களைக் காட்டிக்கொடுக்கும் நயவஞ்சகத் தமிழ்க்காங்கிரஸ் தனிப்பெருந் தலைவர் ஜி. ஜி. என்றேனு ஒருநாள் தமிழரசுத் தந்தை செல்வாவின் காலில் மண்டியிடுவது உண்மை என நான் வாக்குப்பண்ணுகிறேன். நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: பொய் என்றேனு ஒருநாள் உண்மையின் முன் மண்டியிடுவது நிச்சயமானது!

❀

நா. கந்தையா,
ஒட்டமாவடி.

கே: ஆணிகளை வீதியில் நாட்டி செருப்புக்களை மனிதர் மீது வீசி தமிழ் அரசியல் தலைவர்களால் முடியாத மாபெரும் சாதனையாக நிறைவேற்றிய சுயாட்சிக் கழகத்துக்கு தமிழ் மக்கள் செய்ய வேண்டிய கைமாறு என்ன?

ப: வைர்காவற்துறையில் பண்டிதர் இரத்தினத்துக்கு வெற்றிவாகையைச் சூடுவதே!

❀

த. கென்னடி,
திருமலை.

கே. அறிஞர் அண்ணா அவர்களிடம் இந்திரா காந்தி அவர்கள் வைத்திருக்கும் மதிப்பைப்பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: கற்றாரைக் கற்றாரே காமுறுவர்!

கே: மகாத்மா காந்தி உயிருடன் இருந்திருந்தால் இன்னும் மனிதனை வாட்டும் தீண்டாமையைப் பற்றி என்ன நினைப்பார்?

ப: மகாத்மாகாந்தி உயிருடன் இருந்திருந்தால், இதுவரையில் தீண்டாமையை முற்றாக ஒழித்துக்கட்டியிருப்பாரே!

கே: தீண்டாமையின் வடிவம் என்ன?

ப: அறியாமை!

❀

இ. இ. லிங்கம்,
மாங்குளம்.

கே: உடுப்பிட்டியில் ஜெயக்கொடி 'ஜெயக்கொடி நாட்டுவார் எனப் பலர் கூறுகிறார்களே, உண்மையா?

ப: ஆமாம் அரைச் சபாநாயகர் பதவிக்காக இனத்தை விலை கூறி விற்பவர்களை மீண்டும் பாராளுமன்றம் அனுப்புவதற்கு உடுப்பிட்டித் தொகுதி மக்கள் இனப்பற்று, மொழிப்பற்று அற்ற சோற்றுத் துருத்திகளல்ல!

கே: 1964-ல் மா. சபையை ஆதரித்த உடுப்பிட்டி பா. உ. இன்று எதிர்ப்பதன் நோக்கமென்ன?

ப: இதற்குப் பெயர் தான் பச்சோந்தித்தனம்!

கே: காவலூரில் நவரத்தினத்தின் செல்வாக்கு படிப்படியாக குறைந்து வருகிறதே இது எதைக் காட்டுகிறது?

ப: தமிழ் மக்களின் இதயங் கவர்ந்த விடுதலை இயக்கமான தமிழரசுக்கட்சியை விட்டு வெளியேறுபவர்—அவர் எப்படிப்பட்ட வீராதி வீரராயினும்—நாட்டில் செல்லாக் காசாகி விடுவார் என்பதை!

கே: மீண்டும் ஐ. தே. க. பதவிக்கு வந்தால தமிழர் நிலை என்ன?

ப: வந்தால்... தானே!

❀

மா. குணரத்தினம்,
முல்லைத்தீவு.

கே: தனிட்பெருந் தலைவரைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: எட்டப்பன், காக்கை வன்னியன் போன்றவர்களை நல்லவர்களாக்குவதற்கு என்றே தோன்றியிருப்பவர்!

கே: வவுனியாத் தொகுதியில் 70-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் 3000த்திலும் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டுவார் என்கிறேன் நான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ப: யார்? தமிழரசு வேட்பாளர் தானே!

கே: நான் உங்களை நேரில் சந்தித்து பல கேள்விகளை கேட்க விரும்புகிறேன், முடியுமா?

ப: மன்னிக்கவும்—வாரா வாரம் சுதந்திரன் மூன்றும் பக்கத்தில்தான் என்னைச் சந்திக்கமுடியும்!

❀

இ. தர்மபாலன்,
நெடுங்கேணி.

கே: மழை நேரங்களில் காரில் செல்லும் போது தெருவில் போபவர் மீது சேற்றை வாரியிறைப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: சேற்றை வாரி வழங்க உள்ளம் இடந்தராவிடினும் சேற்றையாவது வாரி வழங்கும் நவீன வள்ளல்கள்!

❀

மூ. கருணநிதி,
ஏழாலை.

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்மா பிரதம மந்திரியாக வந்தால்...?

ப: ஐயா சிங்கள இனத்தைக் காக்கும் வீரர் ஆகிவிடுவார்!

கே: திரு. டட்லி சேனநாயகா இப்பொழுதுஎன்ன செய்கிறார்?

ப: நல்ல சோதிடராகத் தேடித்திரிகிறாராம்—தேர்தலுக்கு நாள் குறிக்க!

கே: திருமலையைப் போல யாழ்ப்பாணத்திலும் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றால்...!

ப: யாழ்ப்பாணத்திலும் தமிழ் பல்கலைக்கழகம் நிறுவக்கூடாது—தமிழர்களுக்கு இனி பல்கலைக் கழகமே தேவையில்லையென்று கூறிவிடுவார் தனிப்பெருந் தலைவர்!

கே: ஜீ. ஜீ. தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: ''சீ சீ, ஐந்தாண்டுக் கொருமுறை ஏனிந்தப் பொதுத் தேர்தல் வருகிறது'' என்று எண்ணிக் கொண்டிருக்கலாம்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்க வீதி
கொழும்பு-12.

# பச்சைத் துரோகிகள் பவனி வருகிறார்கள்!

## அரசியல் ஓநாய்களின் ஒத்துழைப்பு ஓலம்!

ஒத்துழைப்பு......ஒத்துழைப்பு......ஒத்துழைப்பு!

1956-ம் ஆண்டுக்கு முன்பு கேட்ட அதே அபஸ்வரம் மீண்டும் வடபகுதியில் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது!

சிங்களவர்களுடன் ஒத்துழைத்தால் தான் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற முடியும் என்று மேடைக்கு மேடை தமிழ் காங்கிரஸ்காரர்கள் 'கோரஸ்' பாடி வருகிறார்கள்!

ஈழத் தமிழினத்தின் இன்றைய இழி நிலைக்கு எந்த ஒத்துழைப்புத் தம்பிரான்கள் காரணஸ்தர்களாக இருந்தார்களோ அதே காங்கிரஸ் தம்பிரான்கள்தாம் இன்று மீண்டும் துணிச்சலுடன் 'ஒத்துழைப்பு' பல்லவிபாட ஆரம்பித்திருக்கிறார்கள்.

சீரோடும் சிறப்போடும் பேரோடும் புகழோடும் வாழ்ந்த தமிழினம் ஈழத்தில் வேரோடு சாய்ந்ததற்குக் காரணமே தமிழ் காங்கிரசின் ஒத்துழைப்புக் கொள்கைதான்!

பதவி மயக்கம் தலைக்கேறப் பாண் விற்கும் இனத்துக்குக் கால் பிடித்துவிட்டு—ஈழத் தமிழினத்தின் உரிமைகள் அனைத்தையும் ஒத்துழைப்பின் பெயரால் ஒவ்வொன்றாகத் தாரை வார்த்தது தமிழ் காங்கிரஸ்!

தமிழ் மொழி, தமிழ்நாடு எக்கேடு கெட்டு அழிந்து போயினும் யூ. என். பி. யுடன் 'ஒத்துழைத்து' அதன் கால்களை நக்கி, அதுபோடும் எலும்புத்துண்டைச் சுவைத்து இன்ப சுகம் காணுவதுதான் தமிழ் காங்கிரசின் கொள்கை!

1948 லிருந்து 1955 வரை யூ. என். பி. அரசாங்கத்துக்குத் தமிழ் காங்கிரஸ் கொடுத்த ஒத்துழைப்பின் பயன் என்ன?

10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர் பிரஜாவுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டனர்.

தமிழர்கள் தமக்கு இருந்து வந்த ஏழு பாராளுமன்ற உறுப்பினர் ஸ்தானங்களை இழந்தனர்!

பட்டிப்பளை ஆறு என்னும் பழந் தமிழ் பெயர் கல்லோயா என்று சிங்களப் பெயராக மாறியது.

தமிழர்களின் பாரம்பரிய தாயகமான கிழக்கிலங்கையில் அம்பாறை, கல்லோயா. அல்லை, கந்தளாய், திருமலை போன்ற இடங்களில் பல ஆயிரக் கணக்கான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்!

தமிழர் பூமி பெருமளவில் ஆக்கிரமிக்கப்பட்டது!

தமிழ் மொழி படிப்படியாகப் புறக்கணிக்கப்பட்டுச் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு நுழைவாயில் தயாரானது!

சேர். ஜோன் கொத்தலாவலையால் மந்திரி சபையிலிருந்து உதைத்துத் தள்ளப்படும்வரை திரு. பொன்னம்பலம் கொடுத்த மானங்கெட்ட ஒத்துழைப்பின் பயன் இதுதான்!

பொன்னம்பலம் உதைத்துத் தள்ளப்பட்ட பின்னும் அவரை வாலறுந்த நரி என்று கேலி பேசிவிட்டு அரை மந்திரி பதவிக்காக குமாரசாமி கொடுத்த ஒத்துழைப்பின் பயன் இதுதான்!

இனத்துக்கு இத்தனை கேடுகள் ஏற்படக் காலாக இருந்த பச்சைத் துரோகிகள் இன்று எந்த முகத்தைக் கொண்டு தமிழ் மக்கள் முன் நடமாடத் துணிகிறார்கள்!

தமிழரசுக் கட்சியும் சிங்களவர்களுடன் ஒத்துழைக்கவே விரும்புகிறது!

ஆனால் தமிழ் காங்கிரஸ் கூறும் ஒத்துழைப்புக்கும் தமிழரசுக் கட்சி கூறும் ஒத்துழைப்புக்கும் மலைக்கும் மடுவுக்கு முள்ள வேறுபாடு இருக்கிறது!

தமிழ் காங்கிரஸ் கூறும் ஒத்துழைப்பு—எசமானுக்கு அடிமை வழங்கும் ஒத்துழைப்பு! சிங்களவர்களிடம் தமிழுரிமைகளை தலை நிமிர்ந்து கேட்கத் திராணியற்று—அஞ்சி கெஞ்சி—குழைந்து நெளிந்து [illegible] யாசிப்பது தமிழ் காங்கிரஸ் வழி!

சிங்களவர் விரும்பாத எதையும் தமிழ் காங்கிரஸ் தட்டிக் கேட்க மாட்டாது! சிங்கள ஆட்சி இரங்கிப் போடும் பிச்சையுடன் தமிழர்கள் திருப்தியடைய வேண்டும்—இதுதான் தமிழ் காங்கிரசின் தாற்பரியம்!

சிங்களவர்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்கள்—அதனால் சமஷ்டிக் கோரிக்கையை தமிழரசுக் கட்சி கைவிட்டு விட வேண்டும் என அரைச் சபாநாயகர் அண்மையில் கூறியிருப்பதும் இதையே பிரதிபலிக்கிறது!

அதுவும் சிங்களவர்களில் ஒரு பகுதியினருக்குத்தான்—யூ. என். பி. முதலாளித்துவ சக்திகளுக்குத்தான் தமிழர்கள் என்றென்றும ஆதரவு தரவேண்டும் என்பது தமிழ் காங்கிரஸ் சித்தாந்தம்!

ஆனால் தமிழரசுக் கட்சி விரும்பும் ஒத்துழைப்பு என்ன?

ஆண்டான்—அடிமை என்ற மனப்பான்மை இன்றி சிங்களவர்களும் தமிழ் பேசும் மக்களும் சம நிலையிலிருந்தபடியே நாட்டுக்குப் பொதுவான பிரச்சினைகளில் ஒத்துழைக்க வேண்டும்—இதைத்தான் தமிழரசுக் கட்சி கூறிவருகிறது!

1965ல் தேசிய அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட போதும் தமிழ் காங்கிரஸ் போல தமிழினத்தின் மானத்தைக் கப்பலேற்றி விட்டு—எவ்வித நிபந்தனையுமின்றி—ஒப்பந்தமுமின்றி அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டு தமிழரசுக் கட்சி தனது ஆதரவை வழங்கவில்லை!

தமிழ் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற எதுவித கவலையுமின்றி யூ. என். பி. ஆட்சி நிலைத்திட்டால் போதுமென்ற ஒரே நோக்குடன் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது தமிழ் காங்கிரஸ்—இன்றும் வழங்கி வருகிறது!

தமிழரசுக் கட்சியோ தமிழினத்தின் கோரிக்கைகள் குறித்து திட்டவட்டமான தெளிவான நிபந்தனைகள் விதித்து அதன் படியே யூ. என். பி.க்கு தனது ஆதரவைத் தந்தது!

நிபந்தனைகள் மீறப்பட்ட போது—இனத்துக்கு இன்னல் நேர்ந்தபோது அமைச்சர் பதவியை உதறித்தள்ளவும் அரசாங்கத்தை விட்டு வெளியேறி அதை எதிர்க்கவும் தமிழரசுக் கட்சி சிறிதும் தயங்கவில்லை!

ஆனால் இனத்துக்கும் மொழிக்கும் இன்றைய ஆட்சியாளர் இன்னல் பல விளைத்தும் கூட விட்டுவிலக முடியாமல் ஒட்டிக் கொண்டிருக்கிறது தமிழ் காங்கிரஸ்!

இதுதான் தமிழ் காங்கிரசின் ஒத்துழைப்பு!

தமிழரசுக் கட்சியோ,

தமிழ் பேசும் பிரதேசத்தை தமிழ் பேசும் மக்களாகிய நாமே ஆளுவோம்—சிங்களப் பகுதியை சிங்கள மக்களாகிய நீங்கள் ஆளுங்கள்—நாமிருவரும் சம நிலையிலிருந்தபடியே இலங்கை நாட்டை ஐக்கியமாக பாது காப்போம் என்று நெஞ்சை நிமிர்த்தி கூறுகிறது!

இதற்காகவே தமிழ்ப் பிரதேசத்துக்கு சுயாட்சியுள்ள சமஷ்டி அரசியலுக்காகப் போராடுகிறது!

தமிழரசுக் கட்சி சிங்கள ஏகாதிபத்தியத்தின் முன் குழையவில்லை—நெளியவில்லை-கூழைக் கும்பிடு போட்டு இனத்தை விலை கூறிவிற்று மந்திரிப் பதவி ஏற்கவும் இல்லை!

தமிழர் மரபுப்படி தலை நிமிர்ந்து நின்று தன்னாட்சி உரிமைக்காக போராடி வருகிறது தமிழரசுக் கட்சி!

தமிழ் காங்கிரசோ குழைந்து நெளிந்து—கூழைக் கும்பிடு போட்டு—உரிமைகளை விலை கூறி விற்று பட்டம் பதவிகளை யாசித்து—சலுகைக்காக சிங்களத் தலைவர்களின் காலில் வீழ்ந்து தமிழர்களின் மானத்துக்கே சவால் விட்டு வருகிறது!

தமிழினமே சிந்தித்துப்பார்! எந்த வகையான ஒத்துழைப்புத் தேவை? தமிழரசுக் கட்சி கூறும் ஒத்துழைப்பா? தமிழ் காங்கிரஸ் கூறும் ஒத்துழைப்பா?

—'கோவை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## இறுதி மார்க்கம் போராட்டமே!

ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி, ஆறு கடந்த பின் நீ யாரோ நான் யாரோ என்றுனும் யாரோ ஒரு நன்றி கெட்டவன்.

அந்த நன்றி கெட்டவனையும் நல்லவனுக்கும் விதத்தில் தேசிய அரசாங்கம் என்று ஒரு காலத்தில் கூறப்பட்ட யூ. என். பி. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுமே அமைந்து வருகின்றன.

தமிழ் பேசும் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதென்பது இப்பொழுதெல்லாம் இன்றைய ஆட்சியின் கீழ் சர்வசாதாரண விஷயமாகி விட்டது!

தமிழ் பேசும் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதென்பது அன்றாடம் நடைபெறும் ஓர் அலுவலாகி விட்டது!

எவ்வளவு எதிர்த்தாலும், எத்தனை ஆட்சேபனைகள் தெரிவித்தாலும் பிரதமரைப் பேட்டி கண்டாலும் விஷயம் கிணற்றுள் போட்ட கல்மாதிரி இருந்து விடுகிறது.

அநீதி துடைக்கப்படுவதில்லை; அதர்மம் களையப்படுவதில்லை. பாரபட்சம் நீக்கப்படுவதில்லை!

தமிழினத்துக்கு முந்திய அரசாங்கங்கள் இழைத்து வந்த அநீதிகளைத் துடைத்தெறியும் ஒரே நோக்குடன் இந்த அரசாங்கம் கொண்டு வந்த புதிய சட்டங்களும், சலுகைகளுமே இன்று மீறப்படுகின்றன.

பழைய அநீதியைப் போக்கவந்ததாக கூறியவர்கள் புதிய அநீதிகளை செய்கிறார்கள்!

பழைய புண்ணுக்கு மருந்து போடப் போவதாக கூறியவர்கள் புதிய புண்களை ஏற்படுத்துகிறார்கள்!

பழைய தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்கள மொழியறிவு அவசியமற்றது என்பதை ஏற்றுக்கொண்டு 700வது இறைசேரிச் சுற்றறிக்கையை வெளியிட்டது அரசாங்கம்!

ஆனால் நடைமுறையில் பழைய ஊழியர்கள் பதவி உயர்வுகளுக்கு விண்ணப்பிக்கும்போது சிங்கள மொழித் தேர்ச்சி கோரப்படுகிறது!

இந்த அநீதியை—அக்கிரமத்தை—தமிழரசுக் கட்சி பல முறை சுட்டிக் காட்டியும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதே போல, புதிய தமிழ் ஊழியர்களுக்கான சிங்களப் பரீட்சையின் கடுமையை குறைக்கும் நோக்குடன் இறைசேரியின் 701வது சுற்றறிக்கை வெளியிடப்பட்டது!

ஆனால் நடைமுறையில் முந்திய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற சிங்களப் பரீட்சைகளை விட இப்போதைய சிங்களப் பரீட்சைகள் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன.

இதைப் பாராளுமன்றத்தில் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் ஆதார பூர்வமாக நிருபித்தும் எதுவும் இதுவரை நடைபெறவில்லை!

தொடர்ந்து தமிழ் ஊழியர்கள் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்! சிங்களத் தேர்ச்சி தேவையற்ற அரசாங்க ஊழியர் பலர் சிங்களத் தேர்ச்சியில்லை என்ற காரணத்தால் வேண்டுமென்றே வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள்.

இந் நிலையில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் மீது—அதுவும் அரசாங்கத்தின் நிபந்தனைப்படி மூன்றாண்டுகாலக் கெடுவுக்குள் சிங்களப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கும் ஊழியர்கள் மீது—மற்றோர் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டுள்ளது ஆட்சிபீடம்!

அதுதான் 769-வது இலக்கமுடைய இறைசேரிச் சுற்றறிக்கையாகும்! இச் சுற்றறிக்கை தமிழ் ஊழியர்களை வேண்டுமென்றே பழிவாங்கும் ஒன்று என்பதில் துளியும் ஐயமில்லை.

இந்த [illegible]ற்றறிக்கை சிங்களப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருந்தும்கூட—புதிய தமிழ் ஊழியர்களின் முது முறை உரிமை பதவி உயர்வு போன்றவற்றை பறிமுதல் செய்யும் கொடுமை நிறைந்ததாகும்!

அரசாங்கம் தானே முன்பு 701-வது சுற்றிக்கை மூலம் புதிய ஊழியர்களுக்கு வழங்கியிருந்த சலுகைகளை 769 வது சுற்றறிக்கை மூலம் இப்போது பறிமுதல்செய்ய முயற்சிக்கிறது!

இது தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு திட்டமிட்டு இழைக்கப்படும் ஓர் இம்சையாகும்!

இவையெல்லாம் தமிழ் ஊழியர்களை அரசாங்க சேவையிலிருந்து துரத்தியடிக்கும் சதி நோக்குடன் திட்டப்பட்டுள்ள சூழ்ச்சிகளாகும்.

சிங்கள மொழிச் சட்டத்தை ஒரு கருவியாகக் கொண்டு தமிழ் பேசும் மக்களை அரசாங்க சேவைக்குள் நுழையவிடாமல் கதவினை இழுத்துப் பூட்டி விடுவதற்கு செய்யப்படும் சூழ்ச்சியாகும்.

இதே போல 1966-ம் ஆண்டின் தமிழ் மொழி சட்ட விதிகளின்படியும் அச் சட்ட விதிகளின் கீழ் கடந்த பெப்ரவரியில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படியும் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கிய மற்றோர் அடிப்படை உரிமையையும் இன்று மறுக்க முன்வந்திருக்கிறது அரசாங்கம்!

தமிழ் பேசும் மக்கள் தமிழில் அரசாங்கத்துக்கு கடிதம் எழுதி தமிழில் பதில்பெறும் உரிமையை தமிழ் மொழிச் சட்டவிதிகளும் அதன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையும் தெளிவாக அங்கீகரிக்கின்றது.

தமிழ் மொழிச் சட்ட விதிகளில் உள்ள உயிரூட்டமான—தமிழ் மக்களின் அடிப்படை மொழி உரிமையை ஓரளவு அங்கீகரிக்கும் விதி இது ஒன்றுதான்.

இதையும் இப்பொழுது மீறத் துணிந்து விட்டது ஆட்சிபீடம்- தமிழ்க் கடிதத்துக்குப் பதில் சிங்களத்திலும், அதன் மொழிபெயர்ப்பு மட்டுமே தமிழிலும் அனுப்பப்படும் என்று உதவி நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்.

இது மிகவும் பாரதூரமான - காத்திரமான பிரச்சினையாகும். தமிழ்க் கடிதத்துக்குத் தமிழில் பதில் தரப்பட வேண்டுமென்று தமிழ் மொழிச் சட்ட விதிகள் கூறும்போது அதை அரசு மீற முயல்வதை எப்படியென்றாலும் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

தமிழ்க் கடிதத்துக்குத் தமிழிலே பதில் பெறாது தமிழில் மொழிபெயர்ப்பைப் பெறுவது தமிழினத்துக்கு மீளாத அவமானமாகும். அன்னைத் தமிழுக்கு இந்நாட்டில் இருக்கும் அடிமை நிலையை அகிலத்துக்கு எடுத்துக் காட்டுவதாகும்!

தமிழ்க் கடிதத்துக்கு தமிழில் பதில் பெறுவதற்கு உரிமை படைத்தவர்கள் தமிழ் மக்கள். ஏதோ தானே என்ற போக்கில் பிச்சை பெறுவதுபோல மொழி பெயர்ப்பு பெறுவதற்கு தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டின் வந்தேறு குடிகளல்லர்.

நாம் எந்த நிலையிலிருந்தோம்—எப்படி ஆட்சிக்கு வந்தோம் என்பதையெல்லாம் மறந்து—அடுத்த பொதுத் தேர்தலை மட்டுமே மனதில் கொண்டு—ஆட்சிக்கு வருவதற்கு யார் உதவினார்களோ அதே மக்களின் உரிமைகளைப் பறிப்பதும் வழங்கிய சலுகைகளை நடைமுறையில் மறுப்பதும் அநீதி விளைவிப்பதும் யூ. என். பிக்கு நீடித்த வெற்றியைக் கொடுக்காது என்பதை பிரதமர் உணரவேண்டும்.

கடந்தகால அரசியல் வரலாறு இதை தெளிவாக உணர்த்துகிறது:

தமிழ் பேசும் மக்களுக்கு செய்யப்படும் கொடுமைகள் அகற்றப்படாவிட்டால்—இழைக்கப்படும் அநீதிகள் துடைக்கப்படாவிட்டால்—மீண்டும் அஹிம்சை வழியில் உரிமைப் போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்கள் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

அறப் போர்க்களத்தில் குதித்துத்தான் நீதியை—நியாயத்தைப் பெறவேண்டிய சூழ்நிலையை அரசாங்கம் தோற்றுவிக்குமானால் அதற்கும் தமிழ் பேசும் மக்கள் கூடுப் [illegible] என்பதை தமிழினத்தின் சார்பில் நாம் மிகுந்த பொறுப்புணர்வுடன் இங்கு [illegible] விரும்புகிறோம்.

# பொன்னம்பலமும் மலையகத் தமிழரும்

ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு திருமணத்தை நடத்தவேண்டும் என்பது கல்யாணத் தரகளின் தத்துவம்!

ஆயிரமென்ன, இலட்சக் கணக்கான பொய்களைச் சொல்லியாவது பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுவிட வேண்டும்—இது தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்தின் அரசியல் தத்துவம்!

அடுத்த பொதுத் தேர்தலில் பொதுமக்கள் தம்மையும் தமது கட்சியையும் காலை வாரிவிட இருக்கிறார்கள் என்பதை துல்லியமாக உணர்ந்து கொண்டு விட்ட திரு. பொன்னம்பலம், பதட்டமடைவதும் மாற்றுக் கட்சியை வசை மொழிகளால் திட்டுவதும் எமக்கு ஆச்சரியத்தைத அளிக்கவில்லை.

கொள்கை ரீதியாக—அரசியல் தத்துவரீதியாக தமிழரசுக்கட்சிக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்கு வக்கில்லாத போது பொய்களைக் கட்டியெழுப்ப பொன்னம்பலம் முயலுவது இயற்கை தானே!

பொன்னம்பலத்தைத் பார்த்துப் பரிதாபப்படுகிறோம்.

ஒரு காலத்தில் தமிழினத்தின் முடிசூடா மன்னன் என்று தமிழ் மக்கள் ஏற்றுப் போற்றிய பொன்னம்பலம், இன்று அரசியலில் ஒரு குப்பை கூளமாக மக்களால் ஒதுக்கப்படும் நிலையை அடைந்தது ஏன்? பொய்யையே நம்பி அரசியல் கடைவிரிக்க வேண்டிய நிலை பொன்னம்பலத்துக்கு தோன்றியதேன்?

நிலையற்ற கொள்கை
பொறாமை,
அழுக்காறு,
பதவி ஆசை
இனத்துரோகம்,
அடிமைத்தனம்,
அகம்பாவம்,
சுயநலம்,

போன்றவற்றை அரசியலில் திரு. பொன்னம்பலம் கடைப்பிடித்து வருவதிலேயே இன்று அழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறார். அவரது கட்சி ஆயுட்காலத்தின் எல்லையை அண்மி விட்டது!

அரசியல் அந்த காரத்தில் மூழ்க விருக்கும் திரு. பொன்னம்பலம் தமிழரசுக்கட்சிக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டு வரும் பச்சைப் பொய்களில் ஒன்று மலை நாட்டுத் தமிழர் பிரச்சினை பற்றியதாகும்!

'1948-ம் ஆண்டு நான் ஆதரித்த சட்டங்களால் 4 இலட்சம் மலைநாட்டுத்தமிழருக்கு பிரஜாவுரிமை கிடைத்திருக்கும். நான் அச்சட்டங்களை ஆதரித்ததை துரோகமெனக் கூறி என்னைவிட்டுப் பிரிந்த தமிழரசுக்கட்சியினர் ஐந்தே கால் இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களை நாடு கடத்தும் இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தை இப்போது ஆதரித்துள்ளனர். எனவே யார் துரோகி?'

தேசிய அரசாங்கத்திலிருந்துகொண்டே தமிழரசார் ஆதரித்த அதே இலங்கை இந்திய உடன்படிக்கை அமுல் சட்டத்தை தாமும் ஆதரித்து வாக்களித்துவிட்டு வடக்கே வந்துநின்று இப்படி ஒரு பொய்யை அனேகமாக ஒவ்வொரு கூட்டத்திலும் கூறுகிறார்.

## [redacted]'எஸ்ஸாரெம்'

### ஓணன் சாட்சி

வேலிக்கு ஓணன் சாட்சி கூறுவது போல நம்மை விட்டு ஓடிவிட்ட ஊர்காவற்துறை நவரத்தினமும், "பொன்னம்பலம் ஆதரித்த சட்டங்களால் மலை நாட்டுத் தமிழர்கள் உரிமை இழக்க நேரிட்டதெனினும் அவர்களை யாரும் நாடுகடத்தியிருக்கமுடியாது. தமிழரசார் ஆதரித்த இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி ஐந்து இலட்சம் பேர் நாடு கடத்தப்படவிருக்கிறார்கள். எனவே பொன்னம்பலம் ஆதரித்த சட்டத்தைவிட தமிழரசார் ஏற்றுக்கொண்ட சட்டம் துரோகத்தனமானது" என்று பிதற்றி வருகிறார்.

எனவே இந்தப் பிரச்சினையை இங்கு அலசுவது அவசியமாகிறது. பொய்யைத் திரும்ப திரும்ப சொன்னால் அது உண்மையாகிவிடும் என்று திரு. பொன்னம்பலமும் அவருக்கு இப்போது புதிதாக பக்கவாத்தியம் வாசிப்பதற்கு ஆரம்பித்துள்ள ஊர்காவற்துறை நவரத்தினமும் கருதுகிறார்கள் போலும்!

ஆனால் தமிழ் மக்கள் அவ்வளவு தூரம் அரசியல் முட்டாள்கள் அல்லர் என்பதை அவர்கள் உணரவில்லை.

### பூரண உரிமை அன்று இருந்தது

1947-ம் ஆண்டு, இந்நாட்டினை பொன்னுடாக்குவதற்கு ஓடாக உழைத்த பத்துலட்சம் மலைநாட்டுத் தமிழர்களும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு இன்று இருப்பதுபோன்று பூரண பிரஜாவுரிமையும வாக்குரிமையும் அனுபவித்து வந்தனா!

1947-ம் ஆண்டுத் தேர்தலில் மலைநாட்டில் ஏழு தொகுதிகளிலிருந்து தமிழ்த் தொழிலாளர்கள் தங்கள் பிரதிநிதிகளைத்தேர்ந்தெடுத்துப் பாராளுமன்றத்துக்கு அனுப்பியும் வைத்தனர்.

இலங்கை அரசியலின் 'குடுமிப்பிடி' மலைநாட்டுத் தமிழன் கையில் அன்று இருந்தது!

மலைநாட்டுத் தமிழர்களிடமிருந்து இந்த அரசியல் அதிகாரத்தை எப்படியாவது பிடுங்கிவிட வேண்டுமென்று திட்டம் போட்டார் டி.எஸ். சேனநாயகா!

மலைநாட்டுத் தமிழனுக்கும வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழனுக்கும் அன்று இருந்த அரசியற் பலம், அவரைக் கலக்கியது!

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் ஒருமைப்பாட்டை

# செனட் தேர்தல் நிலைநாட்டிவிட்டது!



'பெரும்பான்மைத் தமிழ் மக்களின் நல்லெண்ணத்திலும், தமிழ் அரசியல் தலைவர்களுடைய பொறுப்பிலும்தான் சிறுபான்மைத் தமிழர்களுடைய அரசியல் விமோசனத்தின் பெரும்பொறுப்பு தங்கியிருப்பதை நடந்து முடிந்த செனட்தேர்தல் உறுதிப்படுத்தி விட்டது. சிறுபான்மைத் தமிழர்களின் உண்மையான நண்பர்கள் யார் என்பதையும் இது தெளிவாக்கி விட்டது. நமது குரல் தமிழன் குரலாகவே எழுந்து தமிழர்களுடைய நடவடிக்கையாக மாறி தமிழர்களுடைய ஒருமைப்பாட்டையும் நிலை நாட்டி விட்டது'

—இவ்வாறு மனித உரிமைகள் இயக்கத் தலைவரும் மூதவைத் தேர்தலில் தமிழ்க்கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தவருமான திரு. க. இராசலிங்கம் எம். ஏ. சுதந்திரனுக்குவிடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை விபரம் வருமாறு:—

தேர்தலில் தோல்வி கண்டாலும் எமது தேர்தல் இலட்சியத்தைப் பொறுத்த மட்டில் எமது இயக்கத்தின் முதல் முயற்சிக்கு ஒரு மகத்தான வெற்றியென்றுதான் நாம் உறுதியாக நம்புகின்றோம். பிறாவிஸ் எமது சமூக வரலாற்று நிகழ்ச்சிகளைப் பொறுத்த மட்டில் ஒருசாதாரண அம்சமாக அமைந்து கொண்டு வந்தமையைக் கடந்தகாலச் சமூக வரலாற்று நிகழ்ச்சிகள் ஆணித்தரமாக நிலைநாட்டியுள்ளன:

இவ்வாறு எமது சமூக வரலாற்று நிகழ்ச்சியில் தொடர்ந்து வந்த தோல்விகளுக்குக் காரணமென்ன? இந்த இலட்சம் மக்களுடைய மத்தியில் எமது எண்ணிக்கை பெருந் தொகையாக அமைந்திருந்த போதிலும் எமக்கு அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமைதான் அடிப்படைக் காரணம் என்பதை அண்மைக் காலத்தில் நடைபெற்று வந்த எமது சமூக உரிமைப் போராட்ட நிகழ்ச்சிகள் வலியுறுத்தியுள்ளன. எமது குறைகளை ஆட்சியாளர் மன்றில் எடுத்துரைப்பதற்கு ஆட்சியாளரைப் பேட்டிகாண்பதற்குச் சென்ற தூதுக் குழுக்களின் முயற்சிகள் அரசியல் பிரதிநிதித்துவப் பின்னணிச் சார்பு இல்லாமல் அமைந்தமையால் எமது முயற்சிகள் வலுவற்று வலிமையற்று, வன்மையற்று அமைந்து செல்கின்றமையை உணர்ந்தோம்.

எனவே தான் எமது செனற்சபைத் தெரிவு முயற்சியைச் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் பெறும் இலட்சியப் பரிசோதனை முயற்சியாக நாம் மேற் கொண்டோம்.

எமது இயக்கம் அரசியல் கட்சிகளுடைய சார்பற்ற ஒரு சமூக சீர்திருத்த இயக்கமாகவே அமைந்துள்ளது. இச்சமூக சீர்திருத்த இயக்க நடவடிக்கைகளை நிலைநாட்ட எமக்கு எல்லா அரசியற்கட்சிகளுடைய ஆதரவுகளும் எப்போதும் தேவை என்ற அடிப்படையில் இயங்கி வருகின்றோம். எமக்கு அரசியற் பிரதிநிதித்துவம் இல்லாமை தான் எமது சமூகக் குறைபாடுகளுக்கு அடிப்படைக் காரணம் என்று எல்லா அரசியற் கட்சிகளும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளுகின்றன.

எனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நியாயமான கோரிக்கையை நிறைவேற்றும் சூழ்நிலை உருவாகியபோதும் ஏன் அதைப் பரீட்சித்துப் பார்க்கக் கூடாது என்ற நோக்கத்துடன் ஒரு இலட்சியப் பரிசோதனையாக மேற் கொண்டோம்.

நமக்காகப் பரிந்து பேசும் கட்சியினர், அக்கட்சித் தலைவர்கள் பலரைப் பேட்டி கண்டபோது தகுந்த, சிறந்த வழிகாட்டிகள் நமக்கு யார் என்ற நோக்கத்தை எமது மக்களுக்கு எடுத்துக் காட்டி நல்ல வழிகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆரம்பித்தோம். மேலும், பலவகையான பரிசோதனை அம்சங்களை எமது குறிக்கோளாக மேற்கொண்டோம். அவையாவன:—

(i) அரசியல் கட்சிகளுடைய நிலை எமது சமூகப் பிரச்சினைகளின் பால் எவ்வாறு அமைந்துள்ளது?

(ii) உண்மையான நோக்கமா அல்லது கபட நாடகமா?

(iii) எமது சமூகப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்துத்தமது அரசியல் லாபத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரே குறிக்கோளாக இயங்குகின்றனவா அல்லது எமது சமூக நலனைப் பேணிப் பாதுகாப்பதா?

(iv) இக்கட்சியினர் எமது பிரச்சினைகளின் மீது சிந்துகின்ற கண்ணீர் முதலைக் கண்ணீரா அல்லது உண்மையான உணர்வோடு சிந்தும் இரத்தக் கண்ணீரா?

(v) உண்மையில் எமது பிரச்சினைகளைத் தீர்த்து எமக்கு விமோசனம் அளிக்க வழி அமைக்கின்றனவா? அல்லது எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதுபோல் கபட நாடகம் ஆடி, மூற் போக்குப் பேசி, எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வாய்ப்புக்களை அடித்துக் கெடுத்து அப்பிரச்சினைகளைத் தீர்க்க விடாமற்குட்டையைக் குழப்பித்தமது கட்சியை வளர்ப்பதா?

(vi) சமூக மறுமலர்ச்சி யென்ற போர்வையில் சமூக ஒற்றுமையை உருவாகவிடாமல் பிரித்தாளும் கொள்கைக்குச் சிறுபான்மைத் தமிழ்மக்களைப் பலியாக்கி விடுவதா?

(vii) எமது சமூக மக்களிடையே, இளைஞர்களுடைய எதிர்கால விமோசனம் யாருடைய கைகளில் இருக்கின்றது.

VIII எமது சமூக மக்கள் பின்பற்றிச் செல்லவேண்டிய அரசியற்பாதைகள் எவை? எமது சமூகத்தை வழிநடத்திச் செல்பவர்களுடைய பொறுப்பு என்ன என்பன போன்ற பலவேறு பிரச்சினைகளுக்கு விடைகாணும் ...

சோதனை நோக்கமாக சென்ற தேர்வை மேற் கொண்டோம். அம்முயற்சி மேற் கூறிய வினாக்களுக்கு தகுந்த விடையைக் காட்டியுள்ளது. இதனைச் சிறுபான்மைத் தமிழராகிய எமது சமூகத்வர்கள் தமது சிந்தனையால், பகுத்தறிவால் விடையைக் கண்டுகொள்ள வேண்டும்.

எந்த அரசியற் கட்சியினர் தாம் கொடுத்த வாக்குகளை இறுதிவரை உறுதியாக, உண்மையாக நிலைநாட்டினர். எமது சமூகப் பிரச்சினைகளின் மீது பரிந்து தீவிர நடவடிக்கையெடுக்க மிகவும் முற்போக்கு என்று கூறும் கட்சிகள் எமக்கு இறுதி வெற்றி வரும் நேரத்தில் எமது காலை வாரியபோது தமிழர்களுடைய மத்தியில் வலுப் பெற்றிருக்கும் இரு கட்சிகள் தான் இப் பிரச்சினையில் ஒன்று சேர்ந்து இயங்கி எமக்குக் கைகந்துக வியமையை நாம் உணர்வோம். எனவே, தமிழ் அரசியல் தலைவர்களுடைய பொறுப்பில்தான் எமது அரசியல் விமோசனத்தின் பெரும் பகுதிப் பொறுப்பு அமைந்திருப்பதை இத் தேர்தல் நிலைநாட்டியுள்ளது. நிலை நாட்டப்பட்ட இச் செய்கையை நாம் சிந்தித்துச் செயல் புரியவேண்டிய தொன்றாகும்.

எமது சமூகத்திற்கு ஒரு அரசியற் பிரதிநிதித்துவம் அளிக்கும் வாய்ப்பு அமைந்த போது தமது தீவிரப் புரட்சிக் கொள்கைக்கு எமது சமூக மக்களைப் பிரித்து பலியாக்கி, எமது ஒற்றுமையைக் கெடுத்து, தமது அரசியல் லாபம் பெறும் வாழ்க்கை அழிந்து விடுமென்று அறிந்து கிலிப் பிடித்த தீவிர வாதிகள் அடுத்து நின்று எமது வாய்ப்பினைக் கெடுத்துவிட்டார்கள். எனவே, எமது சமூக மக்களை இதனைச் சிந்தித்து செயல் புரியுங்கள்.

சார்பாக அமைந்து வந்த ஒரு அரசியல் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பை ஒரு சில வெற்றிபெறும் புள்ளிகளால் தட்டிக் கெடுத்தமை இப் புரட்சிவாதிகள் எமது சமூகத்தின் நலனுக்கு இழைத்த ஒரு பெருந்துரோகம் எனக் கூறினால் இது பிழையாகாது.

## ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின்

## உண்மையான நண்பர்கள் யார்

## என்பதும் தெளிவாகிவிட்டது!

செனற் தேர்தல் நடவடிக்கைகளில் ஏன் நாம் தோற்றோம்? எத்தனை புள்ளிகளால் தோற்றோம்? யார் இத் தோல்விக்குப் பொறுப்பு? ஏன் கடைசிநேரத்தில் இவ்வாறு செய்தார்கள்? எமது சமூகத்திற்கு நன்மை செய்யும் நோக்கத்துக்காகவா? அல்லது எமது சமூக பிரச்சினையை அடிப்படையாக வைத்துத் தமது கட்சியை வளர்க்கும் நோக்கமாகவா என்று பல்வேறு வினாக்களுக்கு ஆய்வு செய்து விடை காணவேண்டியுள்ளது சிறுபான்மைத் தமிழ் மக்களுடைய கடமையாகும்.

இவற்றைத் தவிரத் தமிழர்களுடைய, தமிழ்த் தலைவர்களுடைய ஒருமைப்பாடு ஒன்று சேர்ந்து உருவாகி

## திரு. இராசலிங்கம் அறிக்கை!

எமது இலட்சியப் பரிசோதனையில் வெற்றி கண்டோம் என்று கூறும் போது பின் வரும் அம்சங்களில் நாம் வெற்றிபெற்றோம்:

I தமிழர்கள் மத்தியில் வலுப்பெற்றிருக்கும் தமிழ் அரசியற் கட்சிகளைக் கூட்டு நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலை உருவாக்கினோம்.

II. எமது சமூக நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் சலியாது உழைக்கும் எல்லா இயக்கங்களையும், அரசியற் கருத்து மாறுபட்ட எல்லா இயக்கங்களையும் ஒன்று சேர்த்து ஒரே குரலைக் கிளப்பினோம். இது போன்ற ஒற்றுமை எமது மத்தியில் இருக்குமேயானால் எமது சமூகப் பிரச்சினைகள் மிக விரைவில் தீர்க்கப்பட்டு நமக்கு விமோசனம் கிடைக்கும் என்ற

(9ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

இரத்துமலானையில் அக்டோபர் 23ந் திகதி இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 269 வது 'சுவீப்' முடிவுகள் பின்வருமாறு;—

முதலாவது பரிசு —ரூபா 85,030
05 N 0353

இரண்டாவது பரிசு —ரூபா 34, 012
03 X 0502

மூன்றாவது பரிசு —ரூபா 8503
27 A 0036

ரூபா 425 சதம் பதினைந்து பெறும் 100 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட் இலக்கங்கள் வருமாறு;—

08 A 0041
19 A 0781
11 A 0046
30 A 0830
02 B 0491
06 B 0041
17 B 0474
04 B 0914
20 B 0700
28 C 0844
12 C 0857
35 C 0958
20 C 0406
34 D 0107
29 E 0102
08 M 0380
21 N 0900
17 N 0822
17 N 0712
25 N 0533
34 O 0690
36 O 0704
14 P 0126
32 P 0144
20 P 0779
16 P 0199
20 P 0314
01 P 0113
02 Q 0723
37 E 0150
31 E 0899
32 E 0437
18 E 0947
21 F 0950
25 F 0832
16 F 0141
13 F 0295
18 G 0114
16 G 0301
17 G 0117
16 G 0947
34 G 0163
14 G 0749
22 H 0530
19 H 0167
25 H 0532
20 H 0423
11 H 0572
15 H 0769
14 H 0053
25 H 0519
14 H 0918
14 J 0829
05 J 0871
21 J 0645
35 J 0028
05 J 0965
21 J 0432
28 J 0731
38 K 0064
35 L 0040
14 L 0404
31 L 0037
25 M 0317
09 M 0052
06 Q 0178
34 Q 0903
22 Q 0465
14 Q 0958
34 Q 0903
02 R 0136
20 T 0827
30 T 0935
09 T 0787
01 T 0742
31 T 0026
23 T 0850
23 T 0739
32 U 0812
29 U 0417
14 U 0533
32 V 0990
14 V 0312
23 V 0622
06 V 0593
01 V 0707
29 W 0887
34 W 0010
03 W 0623
19 W 0333
09 X 0297
28 X 0344
03 X 0156
02 X 0324
22 Y 0033
17 Y 0234
23 Y 0207
22 Z 0529
12 Z 0882
04 Z 0805
12 [illegible]


## சுதந்திரனில்

விரைவில் எதிர்பாருங்கள்!

"சுயாட்சிக் கழகத் தலைவருக்கு யாழ்ப்பாணப் பனங்கொட்டையின் பகிரங்கக் கடிதங்கள்"

எழுதுபவர்:— 'பனங்கொட்டை'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ. சீ. ஈ. பரீட்சையின்போது

# மலையகத் தமிழ் மாணவர்கள் படும் அவதி!

## இதனை நீக்க கல்லூரி அதிபர்கள் ஆசிரிய சங்கங்கள் முன்வருமா?




மலையகத்தில் கல்விகற்கும் ஜீ. ஸீ. ஈ. மாணவர் பகிரங்கப் பரீட்சையின்போது தமது உரிமைகள் பலவற்றைப் பறிகொடுத்துப் பரீட்சை எடுக்கவேண்டியிருக்கின்றது. 1969 ஜீ. ஸீ. ஈ. பரீட்சை நடந்தபோது மலையகப் பரீட்சை நிலையமொன்றில் பரீட்சை மேற்பார்வையாளராகக் கடமையாற்றியபோது தமிழ் மாணவர்கள் படும் கஷ்டத்தை என்னால் அறிய முடிந்தது.

மலையகத்தில் சிங்கள, தமிழ் பிள்ளைகள் ஒன்றாகவே பரீட்சை நிலையங்களில பரீட்சைக் குரிய விடைகளை எழுதுகின்றனர். சிங்களப் பிள்ளைகள் அதிகமாயிருக்கும் பகுதிகளிலும் சரி, தமிழ் பிள்ளைகள் அதிகமாயிருக்கும் பகுதிகளிலும் சரி, அவர்களுக்குத் தனித்தனி பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்படாது ஒரே நிலையத்திலேயே எழுதுகின்றனர்.

மலையகத்தில் பரீட்சை மேற்பார்வையாளர்—நோக்குனர்—பியோன் அனைவரும் சிங்களவர்களாகவே இருக்கின்றனர். இதனால் தமிழ்ப் பிள்ளைகளின் வேண்டுகோளை நிறைவேற்ற அவரு எவரும் உதவிக்கு வருவதில்லை. அவர்கள் தமது நியாயமான சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலையில் பரீட்சை எழுதுகின்றனர்.

கடந்த பரீட்சையின்போது சில நிலையங்களில் தமிழ் 'கொஞ்சம்,' 'கொஞ்சம்' பேசத் தெரிந்தோர் கடமையாற்றினர். அவர்கள் 'இனிஎழுது' 'நேரம்மாகிறது'

'நிறுத்து' 'போங்க' போன்ற தமிழ்ச் சொற்களுடன் பரீட்சை நிலையத்துத் தமிழ்ப் பிள்ளைகளைச் சமாளித்தனர்.

சில நிலையங்களில் சிறப்பாக அட்டனில் தனிச் சிங்களம் தெரிந்த பரீட்சை மேற் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டதால் அவர்களால் தமிழ் மாணவர் பட்ட கஷ்டம் இம்மட்டு அம்மட்டு அல்ல, சில நிலையங்களில் 'எழுதத் தொடங்கலாம்' 'நேரம் வந்து விட்டது'; 'எழும்பிநில்லுங்கள்' என்ற தமிழ் வசனங்களைச் சிங்கள எழுத்தில் எழுதி அவற்றைச் சந்தர்ப்பத்துக்கேற்ப தட்டுத்தடுமாறி வாசித்துச் சமாளித்தனர்.

சில நிலையங்களில் தமிழ் மாணவர் சிங்களப் பிள்ளைகளைப் பின் பற்றியதைய அன்றித் தமிழ் மொழியில் கட்டளை எதுவும் பெறவில்லை. பரீட்சை மேற்பார்வையாளர் இடை இடையே நேரத்தைக் குறிப்பிடுவதும், பரீட்சை முடிய இன்னும் சில நிமிடங்கள் தானிருக்கின்றன, பேப்பரைக் கட்டுங்கள் என்பன போன்ற கட்டளைகள் எதுவும் தமிழில் சொல்லப் படாது தமிழ் மாணவர் விழித்தனர். கூறிப் படித்த கரும மாற்ற வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

தேவையான கடதாசிகளையோ, மைஒற்றித் தாள்களையோ—லொக் போன்ற அட்டைகளையோ, அவர்கள் தமிழில் கேட்டுப் பெற முடியாது திண்டாடிய காட்சி கண்ணராவிக் காட்சியாக இருந்தது. சில நிலையங்களில் அறிமுக அட்டை கொண்டு வராதோர் அதற்குரிய காரணத்தைத் தமிழில் விளக்க, அதைப் புரிந்து கொள்ளும் சக்தியற்ற பரீட்சை மேற்பார்வையாளர்களும் இருந்தனர்.

பேச்சுத் தமிழே இடம் பெறாத நிலையங்களில் எப்படி வினாத்தாளிலுள்ள சந்தேகங்களைக் கேட்டு அறிவது. பொதுவாகத் தமிழ்ப் பிள்ளைகள் தமது உரிமைகள் பலவற்றைத் தாரை வார்த்து மௌனிகளாகப் பரீட்சை நிலையத்தில் இருந்தனர்.

இத்தனைக்கும் அவர்கள் சிங்களப் பிள்ளைகள் போன்று இந்நாட்டில் சமசந்தர்ப்பங்களும் பெற வேண்டியவர்களல்லவா? தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு இம்முறை சில பத்திரங்கள் நிரப்பும்படி கேட்டிருந்தார்கள்; பரீட்சைப் பெறுபேறு அனுப்பச் சில என்வலப்புகளில் பல விபரங்கள் எழுத வேண்டியிருந்தது. அப்போது அவர்களுக்குப் பரீட்சை மேற்பார்வையாளர்களோ, நோக்குனர்களோ, உதவ முடியவில்லை. ஒருவர் பாஷை ஒருவருக்குப் புரியவில்லை.

இந்த இடத்தில் இதனை நிரப்புங்கள் என்று சொல்லிக் கொடுக்க அவர்களுக்குத் தமிழ் தெரியாது. இதில் எங்கே எதை எழுதுவது என்று கேட்ட மாணவர்களுக்குச் சிங்களம் புரியாது. இருபாலாரும் திருட்டு விழி விழிக்க வேண்டியேற்பட்டது.

தமிழ் பரீட்சார்த்தியும் சிங்களப் பரீட்சார்த்தி போல் தனது விண்ணப்பத்திற்கு ரூபா 25 முத்திரை கொடுத்துத்தான் பரீட்சை எடுத்தார். எனவே அவருக்கு இப்படியான பகிரங்கப் பரீட்சை நிலையங்களில் தனது சந்தேகங்களைக் கேட்டுத் தெரிய வாய்ப்பிருக்க வேண்டியதவசியம்.

வினாத் தாள்களில் பரீட்சை இலாகா விடும் தவறுகள் ஒரு புறம் - எதையும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாத பரீட்சை மேற்பார்வை

(9ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன்

மலையக நிருபர்

**'புத்தொளி'**

# நாவலப்பிட்டி நகரசபைக்கு தமிழர்போட்டியிடுவது ஊர்ஜிதம்

நாவலப்பிட்டி நகர சபைக்கான நியமனத் திகதி 5—11—69 அன்று நடக்க இருக்கின்றது தற்போது நான்கு முஸ்லிம் அங்கத்தவர்களையும் நான்கு சிங்கள அங்கத்தவர்களையு கொண்டுள்ள இந்த நகரசபையின் தலைவராக ஒருமுஸ்லிமே இருந்து வருகினறார்.

இந் நகர சபையில் தமிழ் பிரதிநிதிகளும் ஒரு காலத்தில் இருந்தனர் இன்றைய மூன்றும் வட்டாரத்தில் முன்னர் தமிழ் அங்கத்தவரே இருந்தார். இப் போது இவ் வட்டார அங்கத்தவர் ஒரு சிங்களவர்!

தமிழர் பெரும்பான்மையாக இருக்கும் சில வட்டாரங்களிலும் சமீபகாலமாக தமிழர் ஒருவர் பிரதிநிதியாக இருக்க வில்லை. போட்டியிடவும் முன் வரவில்லை.

இம் முறை நடக்க இருக்கும் தேர்தலில் 1ம் வட்டாரத்திற்கு தமிழர் ஒருவர் போட்டியிட முன் வந்திருக்கின்றார். அவர் போட்டியிடுவது உறுதியாகி விட்டது. முதலாம் வட்டாரத்தில் 201 தமிழ் வாக்காளர்களும் 41 ஏனைய வாக்காளர்களும் இருக்கின்றார்கள். எனவே தமிழர் ஒருவர் இவ்வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெறுவது எதிர்பார்க்கக் கூடியதே.

இம்முறை தமிழர் ஒருவர் போட்டியிட இருப்பதை அறிந்த சிலர், அவர்களும் தமிழர்கள் தாம், அவர்கள் அப் போட்டியாளரை போட்டியிட வேண்டா மென்று கேட்டு வருகின்றனர். போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் அவர் தமது கடமையைச் செய்யும் போது பல முட்டுக்கட்டைகள் ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளனர்.

போட்டியிட இருக்கும் அபேட்சகர் ஒரு விற்பனையாளர், மலை நாட்டு கழக மொன்றின் முக்கிய அங்கத்தவர். விறு விறுப்பான இளைஞர் அவரை மிரட்டியோ அதட்டியோ போட்டியிடுவதனின்றும் வாபஸ்பெற இது வரை எடுத்த பிரயத்தனங்கள் அத்தனையும் புஸ்வாணமாகின.

தமது பாச்சா பலிக்கவில்லை என்று தெரிந்ததும் அந்த வட்டார தமிழ் பிரமுகர்கள், முதலாளிகள் அவரின் தாயாரை அணுகி மகனைத் தடுத்து நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மகன் போட்டியிட்டால் படுமோசமான சம்பவங்கள் நடக்கலாம் என்றும் எச்சரித்திருக்கின்றனர் அந்தத் தாயை.

தமிழ் மக்கள் தமக்கென ஒரு தமிழ் பிரதிநிதியை

(9ம் பக்கம் பார்க்க)

# 'தினபதி', இரியகொல்லை மீது அண்ணமலை கடும் தாக்கு!

25-10-1969 இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 23-வது மகாநாடு கடைசி நாள் நிகழ்ச்சி அட்டன் டன்பார் மைதானத்தில் அதன் தலைவர் திரு. தொண்டமான் எம். பி. தலைமையில் நடைபெற்றது அப்போது இ. தொ. கா. ஸ்தாபக அங்கத்தவரும் நியமன எம். பி. யுமான திரு. வி. அண்ணாமலை உணர்ச்சி மேலிட்டு நகைச்சுவையாகப் பேசிக் கொண்டிருந்தபோது கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்.

"தினபதி சிந்தாமணி தமிழருக்காக - சிறப்பாக தோட்டத் தொழிலாளருக்காகப் பாடுபடுவதாக நடிக்கிறது. தினபதி தமிழ்மக்களுக்காக - தோட்டத் தொழிலாளருக்காகப் பாடுபடுவதென்று கூறுவதெல்லாம் பச்சைப் பொய். தமிழரைத் தினபதி ஆதரிக்கும் அதே வேளை தமிழரைப் பற்றி - தொழிலாளரைப் பற்றி தினபதியின் சகோதரப் பத்திரிகை 'சன்' முற்று முழுதாக எதிர்த்து எழுதுகிறது. தினபதிக்கு உண்மையில் தமிழ் மக்கள் மேல் அக்கறை இருக்குமானால் 'சன்' தமிழ் மக்களை எதிர்த்து எழுதுவதை இது வரை நிறுத்தி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரே ஸ்தாபனத்திலிருந்து வரும் மும்மொழிப் பத்திரிகைகளும் ஒவ்வொரு வேஷம் போட்டு மக்களிடையே நடமாடுகின்றன. தினபதி தமிழருக்காக் நீலிக் கண்ணீர் வடிக்கின்றது 'சன்' தவச தமிழரை எதிர்த்து, திட்டி எழுதுகின்றன. இந்த இரட்டை வேடம் எத்தனை நாட்களுக்கு? தினபதியின் இருகு தாளம் தமிழ்மககளால் இன்றுநன்கு உணரப்படுகின்றது. இப்பத்திரிகையின் போக்கில் தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எங்களுடைய மந்திரிகளில தமிழ் மக்களின் முதல் எதிரியும் தமிழ்எம். பிக்களின் வெறுப்புக்குள்ளாகியிருப்பவர் ஒருவர் உண்டானால் அவர்தான் எமது ஈரியகொல்லை தமிழ் பிள்ளைகளின் கல்வியில் சிறிதும் அக்கறையில்லாது இருக்கின்றார். தோட்டப் பாடசாலைகள் நிலையையும், மலையக தமிழ் பாடசாலைகள் நிலையையும் இதுவரை பல தடவைகள் எடுத்துச் சொல்லியும் அவர் எமது பேச்சை புறக்கணித்து நிராகக்கருதுகின்றார். அவரை அழைத்து வந்து இப்பாடசாலைகளின் நிலையை காட்டினால் விமோசனம் கிடைக்குமோ என்னவோ?'

—இவ்வாறு இ. தொ. கா. மாநாட்டில் பேசிய அண்ணாமலை ...

அடுத்தவாரம்

அட்டனில் நடைபெற்ற இ. தொ. கா. விமர்சனம் இடம் பெறும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாட்சிக் கழகத்தின் சுயரூபம் அம்பலம்!

ஒரு ஜனநாயக நாட்டிலே கட்சியின் கொள்கை பிடிக்காவிட்டால் அக் கட்சியின் கொள்கை மீது அவநம்பிக்கையேற்பட்டால்—அக் கட்சியிலிருந்து பிரிந்து வேறொரு கட்சியில் சேரவோ, அல்லது புதிய கட்சியை நிறுவவோ யாருக்கும் உரிமையுண்டு அல்லது சுயேட்சையாக பாராளுமன்றத்திற்கு போட்டியிடவோ உரிமையுண்டு.

சென்ற 12-10-69 ஈழநாடு பத்திரிகையில் கோப்பாய் தொகுதியில் உள்ள நீர்வேலியில் ஈழ சுயாட்சிக் கழகத்தின் கூட்டமொன்று நடந்ததாகவும், அந்தக் கூட்டத்திலே ஈழத்து சிவானந்தன், வேலணைக் கிராமச் சபைத் தலைவர் திரு. சதாசிவம், திரு. உரேந்திரன், திரு பாலசிங்கம் எனபவர்கள் உரை நிகழ்தியதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்று நடந்த கூட்டத்திற்கு சமூகமாயிருந்தவன் என்ற முறையில் அங்கு நடந்ததை தமிழ் மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

வேலணை கிராமசபை தலைவரோ அல்லது ஈழத்து சிவானந்தனோ உரேந்திரனோ, பாலசிங்கமோ, யாருமே அங்கு சமூகமளிக்கவும் இல்லை, பேசவும் இல்லை.

சென்ற பல தேர்தலில் தமிழரசுக் கட்சியை ஆதரித்து வந்த மேடைப்பேச்சாளர் திரு. மு. கனகசுந்தரம், 1965-ல் நடைபெற்ற பங்குனித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் முன்னைநாள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் பாலசுந்தரம் அவர்களை ஆதரித்து பேசிவிட்டு பின்பு திரு. சி. கதிரவேலுப்பிள்ளை வெற்றி நிட்சயம் என்று கண்டபின்பு தமிழரசுக் கட்சியின் அபேட்சகர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையை ஆதரித்து பிரச்சாரம் செய்து வந்தார். இவர் இப்பொழுது ஈழத்துச் சுயாட்சிக் கழகத்தின் கோப்பாய் தொகுதியில் அபேட்சகராக நிறுத்துவதென்று அக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

திரு. கனகசுந்தரம் உரும்பிராய்ப் பகுதிக்கு ஒரு சமாதான நீதவான் பதவி கிடைக்காமல் திரு. நடேசலிங்கத்திற்கு கிடைத்துவிட்டதால் தமிழரசுக்கட்சி தனக்கு பெற்றுக்கொடுக்கவில்லையென்பதற்காக இப்பொழுது திருவாளர் நவபெறுவதற்காக கட்சியின் அடிப்படை இலட்சியங்களை கைவிட்டு தவறான பாதை கூதயில் கட்சியை கொண்டு சென்றதாகவும் அத்துடன் அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அலரிமாளிகையில் சிங்கள அமைச்சர்களிடம் அடிவாங்கி மௌனமாக இருந்ததாகவும், அடையாள அட்டை மசோதா இலங்கை இந்திய ஒப்பந்த மசோதாவிலும் தான் தான் தமிழரசுக் கட்சியினருடன் கருத்துவேற்றுமை கொண்டு வெளியேறியதேயன்றி கட்சி தன்னை வேளியேற்றவில்லை என்றும், தான் தமிழரசுக் கட்சியை எதிர்த்து போட்டியிடுவதன் நோக்கம் பாராளுமன்ற ஆசனத்தில் தமிழ் மக்களின் அடிப்படை நோக்கங்களையும் இலட்சியங்களையும் தவறான பாதையில் கொண்டுசென்ற எந்த ஒரு தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கக்கூடாதென்பதே வில்லையென்ற காரணத்திற்காகவும் பிழையான வழியில் கட்சியைக் கொண்டுசென்றதாக குற்றம் சாட்டக்கூடாது. தமிழரசுக்கட்சி என்பது தனிப்பட்டவர்கள் சொத்தோ உரிமையோ அல்ல. கட்சியின் பல அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஆலோசனைப் படிதான் கட்சியை நடத்தலாமேதவிர சர்வாதிகார பாதையில் கட்சியைக் கொண்டு நடத்த யாராலும் முடியாது.

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் விடுதலைக்கான அடிப்படை இலட்சியம் எதையும் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. அடையாள அட்டை மசோதா, இலங்கை இந்திய ஒப்பந்த மசோதா இந்த இரண்டிலும் தமிழ் மக்களின் எந்த உரிமைகளும் பறிபோகவில்லை, என்ற காரணத்தினால்தான் தமிழரசுக்கட்சி இந்த இரண்டு மசோதாக்களையும் ஆதரித்தது.

**மு. வேலுப்பிள்ளை**

---

## காமராசர் காவடியும்! கருணாநிதி காவடியும்!!

'நாங்கள் பதவியில் இருந்தபோது டில்லிக்குக் காவடி எடுத்தோம் என்று கூறிய கருணாநிதி, இன்று டில்லிக்குக் காவடி எடுக்கிறாரே' என்று மதிப்பிற்குரிய காமராசர் பேசியிருக்கிறார்; இந்தப் பேச்சால் ஆத்திரமோ கோபமோ எனக்கு ஏற்படவில்லை — மகிழ்ச்சி தான் ஏற்பட்டிருக்கிறது.

'நாங்கள் காவடி எடுத்தபோது குறைகூறிய கருணாநிதி, இன்று காவடி எடுக்கிறாரே' என்று அவர் பேசுவதன் மூலம், முன்பு அவர் காவடி எடுத்தார் என்பதை ஒப்புக்கொள்கிறார்.

'காவடி எடுப்பது காமராசரா—கருணாநிதியா என்பது பிரச்சினையில்லை; ஒரு மாநில முதலமைச்சர்—எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும்—'காவடி எடுக்கவேண்டும்' என்ற இழிநிலை இருக்கிறது; 'இந்நிலை அகன்றிட மாநில சுயாட்சி தேவை' என்று தி.மு. கழகமும், தமிழரசுக் கழகமும், முற்போக்கு கட்சிகளும் கூறுகின்றன.



'ஆயினும், காமராசர் காவடிக்கும் — கருணாநிதி காவடிக்கும் ஒரு வேறுபாடு உண்டு; அவரது காவடியில் இங்கிருந்து ஏதாவது டில்லிக்குப் போகும்; ஆனால் எங்கள் காவடி அங்கிருந்து ஏதாவது கொண்டுவரும்!

'எனினும், 'காவடி—காவடிதான்' என்பதை ஒப்புக்கொள்கிறேன்; ஆகவே, இந்த இழிநிலை அகன்றிட—மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைத்திட—மாநில சுயாட்சி பெற்றிட அனைவரும் ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப வேண்டும்.

'அதற்கு காமராசரின் தமிழ்நாடு காங்கிரசு ஆதரவு நல்கி—ஒன்று சேர்ந்து போராட முன்வரவேண்டும்; 'மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கோரும் அணிவகுப்பில் சேர வாரீர் — சேர வாரீர்' என்று காங்கிரசுக் கட்சிக்கு அன்பழைப்பு விடுக்கிறேன்.

'அத்தகைய போராட்டத்தின் பயனாக மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கிடைக்குமானால்—மாநில சுயாட்சி கிட்டுமானால்—இங்கே இருக்கும் பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளும் வளமும் விரிவும் நமக்குக் கிடைக்கும்.

'நான் எவ்வளவு பெரியவன்—எனக்குக் கருணாநிதியா அழைப்புத் தருவது? என்று காமராசர் கேட்டாலும் கேட்கலாம்.

'திருமண அழைப்பு அனுப்புகிறவர் வயதில் சிறியவராகக்கூட இருக்கலாம்; 'எனக்கு நீ அழைப்பு விடுப்பதா' என்று வயதில் பெரியவர் கேட்பதில்லை.

'அதுபோல், ஒரு நல்ல காரியத்துக்கு, பெரியவரான காமராசரும் — அவரது தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியும் வரவேண்டும்—அணிவகுப்பில் சேர வேண்டும்—என்ற அன்பழைப்பை விடுக்கிறேன்.'

இவ்வாறு முதலமைச்சர் மு. கருணாநிதி சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

---

போது ஏன் கட்சியிலிருந்து

# பொன்னம்பலத்துக்கு நவரத்தினம் வக்காலத்து!

ரத்தினத்தோடு சேர்ந்துள்ளார். மேற்படி கூட்டத்தில் திரு. வி. நவரத்தினம், திரு. மு. கனகசுந்தரம் மட்டுமே பேசினார். அதிகமாக தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களே அந்த 40பேர் கொண்ட கூட்டத்திற்கு சமூகமாயிருந்தார்கள்.

இந்தக் கூட்டத்தில் திரு. நவரத்தினத்தின் பேச்சு எமக்கு மிக வேதனையைத் தரக்கூடியதான பேச்சாக இருந்தது. திரு. நவரத்தினம் பேசும்போது நாம் அமைதியாகவும், கண்ணியமான முறையிலும் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் திரு. நவரத்தினம் பேச்சு முடிந்ததும் இளைஞர்களாகிய நாம் அவருடைய பேச்சுக்கு பதில் கொடுத்துப்பேச ஆயத்தமாயிருந்தோம். ஆனால் அவர் பேசி முடிந்தவுடன் மழை பொழிய ஆரம்பித்துவிட்டது. அந்த மழையையும் பொருட்படுத்தாமல் இளைஞன் பொ. சுப்பிரமணியம் பேசிக்கொண்டிருக்கும் போது மழை பெரிதாக பெய்ததால் திரு. நவரத்தினம் வேறொருமுறை பேசலாமென்று காருக்குள் ஏறிச் சென்றுவிட்டார். ஆதலால் தகுந்த பதில் கொடுக்க சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டது. ஆதலால் பதில் கொடுக்கவேண்டியது எமது கடமையாகும்.

என்றும். அத்துடன் தனது கட்சிக்கு வாக்களிக்காவிட்டாலும் திரு. பொன்னம்பலம் கட்சிக்கு வாக்களிப்பது நல்லதென்றும், ஏனென்றால் திரு. பொன்னம்பலம் அவர்கட்கு தொழிற்சாலை, பல்கலைக் கழகம் போன்ற தனியுதவிகளை பெறக்கூடிய திறமை இருப்பதாகவும், தமிழரசுக்கட்சி பொன்னம்பலம் அவர்களை இந்திய மக்களுக்கு துரோகம் செய்துவிட்டது என்று திட்டிவிட்டு இப்பொழுது அவர்களின் வழியில் நடந்துகொண்டதாகவும் அடையாள அட்டை மசோதாவில் தான் கட்சியை எச்சரித்ததாகவும் அதற்கு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்டுப்படவில்லை என்றும் கட்சி பிழையான பாதையில் சென்றது என்பதை நிரூபிக்க திரு. அமிர்தலிங்கத்தை பொது மேடையொன்றுக்கு வாதாடவரும்படி பலமுறை அழைத்ததாகவும், அவர் அதற்கு உடன்படவில்லையென்றும், கூறினார்.

## சிவசுந்தரம், பாலசுந்தரம், மாணிக்கம் வரிசையில் அடுத்தது 'முளை!'

### தனிப்பட்டவர் சொத்தல்ல!

திரு. நவரத்தினம் அவர்களே, உங்களுடன் திரு. கா. பொ. இரத்தினத்தை வெளியேறவில்லையென்று கேட்டபொழுது நீங்கள் பொறுத்திருந்து பார்த்ததாக கூறினீர்கள். உமது கட்சியின் தனித்தமிழ் நாட்டுக் கொள்கையின்படி இந்திய மக்களின் நிலை என்ன என்று கேட்டபொழுது அவர்கள் இருப்பதற்கு மலைநாடு இருப்பதாக குதர்க்கமான பதில் கூறினீர்கள். அத்துடன் தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்காது தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்தால் திரு. பொன்னம்பலம் அவர்கள் தனித்திறமையால் தொழிற்சாலை, பல்கலைக்கழகம் முதலியவற்றை பெறமுடியும் என்று கூறினீர்கள். திரு. பொன்னம்பலம் அவர்கள் தனிப்பட்ட உதவி [illegible] அன்று மந்திரிப்பதவியேற்று சலுகைகளைப் பெற்று தமிழ் மக்களின் உரிமைகளை பறித்துக்கொடுத்து சிங்கள மக்களை தமிழ்ப்பகுதியில் குடியேற வழிவகுத்தார். இதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள் என்று நம்புகிறோம்.

### நோக்கம் இதுதான்

உங்களுடைய பேச்சிலிருந்து ஒரேயணி, ஒரேயுருவம், ஒரே கட்சியின் கீழ் தமிழ்ப்பேசும் மக்கள் ஒன்றுபட்டிருப்பதை நேரடியாக

### நவரத்தினம் பேச்சு

திரு. நவரத்தினம் பேசும்போது, திரு. அமிர்தலிங்கம் கட்சியை சர்வாதிகார முறையில் கொண்டு நடத்துவதாகவும், குறிப்பாக முன்னைநாள் அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் மந்திரிப்பதவி

# கட்சியைவிட்டு விலகியோருக்கு கடந்தகாலம் கற்பிக்கும் பாடம்!

போட்டியாக வேர்காலத்து முறையில் நிறுத்தியதாலும், திரு. மு. திருச்செல்வத்திற்கு கிடைத்த மந்திரிப் பதவி உமக்கு கிடைக்கவோ மறைமுகமாகவோ சிதறடித்து, ஏனைய கட்சிக்கு வெற்றியீட்டி கொடுப்பதே உமது நோக்கமாகும். இப்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய உலகு

-"வேதாளம்"-

இவ்வாரம் இலக்கிய உலகில் என்ன நடந்திருக்கிறது? பரபரப்பான எவ்வித நிகழ்ச்சிகளும் இல்லை. ஒரு நல்ல இலக்கியக் கூட்டம் நடத்ததாகவும் அதனைப்பற்றித் தான் வருமபோது கூறுவதாகவும் யாழ் நண்பரொருவர் 'போஸ்காட்' எழுதியுள்ளார். எனவே அதைப்பற்றி அடுத்த வாரம்தான் எழுதலாம்.

'குன்றக்குடி அடிகளும் பாலும்' பற்றித் தமிழன்—பண்பாடு—பாரம்பரியம் என்பவற்றைத் தொட்டு இங்குள்ளவர்கள் தம்பட்டமடிக்கிறார்கள். ஆனால் குடிநீர்க் கிணற்றுக்குள் பொலிடோல் 'வாக்கும்' தர்மவான்கள் செய்வார்கள் தான்' என்று தைரியமாக ஜீவா எழுதியிருக்கின்றாரே. எல்லாவற்றுக்கும் 'பலே' என்னுமல் 'நறுக்'கென சொல்வதுதான் நேர்மையானது.

★

மல்லிகை வந்திருக்கிறது. பிரச்னைக்குரிய ஒரு கட்டுரையுடன். மாப்பசானும் ஜானகிராமனும் பற்றியதைத்தான் குறிப்பிடுகிறேன். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இப்படியான 'பார்வை'களும் கட்டாயம் தேவையானதே.

இக்கட்டுரை பற்றியே ஒரு 'கதை'யுண்டு தமிழ் நாட்டின் பிரபல இலக்கிய பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பப்பட்டதாம். ஆனால் உடனே திரும்பி வந்திருக்கிறது. 'பிரச்சினையான விஷயம், பிரசுரிக்க முடியாததற்கு மன்னிக்கவும்' என்ற 'அடிக்குறிப்'புடன்.—அப்படியானல் சக எழுத்தாளன் ஒருவனின் கருத்தை மதிக்கும் பண்பு அங்கேயும் இல்லையா?

'பவர்' 'வாசகர் பேரவை' 'மதுரை வாசகர்கள்' முதலியோரின் கூட்டங்களில் எப்படித்தான் நேர்மையான விமர்சனம் செய்கிறார்களோ? — அல்லது இப்படியான ஒரு பரச்னைக்குரிய கட்டுரையை அவர்கள் ஈழத்திலிருந்து எதிர்பார்க்கவில்லையா அல்லது விரும்பவில்லையா?

எது எப்படியானாலும் இவ்வித கட்டுரைகளை ஆங்கிலத்திலும் வரச்செய்தால் சக இனத்தவரும் பிறமொழியினரும் கூட நம்நோக்குகளையும் வளர்ச்சியையும் அறிய வாய்ப்புண்டாகும்.

அது நிற்க—

இரு படைப்புகள் ஒன்று போலிருந்தால் அது 'காப்பி'யேதானா? இருவேறு எழுத்தாளர்களுக்கு ஒரேவித கருக்கள் உதயமாவது அல்லது கிடைப்பது, சாத்தியமாகாததல்லவே. புதுமைப்பித்தனின் 'கயிற்றரவு'—மோகினி முதலியன ஜேம்ஸ் ஜோய்சின் உணர்வின்றியே எழுதப்பட்டதாக அறிகின்றோமே.

இன்னென்று சொல்கிறேன். பிரஸ்தாப கதை போன்று 'அம்மா—மகன்—பால்' நாவலொன்று ஏறக்குறைய பத்தாண்டுகளுக்கு முன்பே சிங்களத்திலகூட வந்திருக்கிறது. சிங்கள விமர்சகர்கள் மதியில் 'பரபரப்பை' ஏற்படுத்தியதும் உண்மை. நம்மவர்களுக்கு இதெல்லாம் தெரியாதுதான். எனவே அது......?

அதன்றி அப்படியே 'காப்பி'தான் என்றால் 'ஒரு புளிய மரத்தின் கதை'—'தேவன் வருவாரா'—சுந்தரராமசாமியின் ஒன்று—அன்பளிப்பு-ரகுநாதனின் தொகுதி முதலியவைவற்றையும் பார்த்தால் பல ஆச்சரியமான 'ஒற்றுமை'களைக் காணலாமே. (தனித்தனியே பின்னர் கவனிப்போமா?)

ஏன் நம் நாட்டில் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற இரண்டெழுத்துத் தொகுதியொன்றின் கதை பற்றியும் சோமசெட் மாம் பற்றியும் கூட ஒரு சுவையான 'ரகசியம்' உண்டே. இது என் வாசகர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தைத்தான் தரும். அப்படித்தானே?

எனக்குப் பல கடிதங்கள் வருகின்றன. பத்திரிகையின் இந்த மூன்றுவது தினத்திலும் விஷயங்களில் 'தெளிவு' இல்லை என்று. மிக இறுக்கமாக இருக்கின்றனவாம். இலக்கிய கர்த்தாக்களுக்கு என்பதால் இறுக்கமாகத்தான் இருக்கட்டுமே.

பொதுமக்களும் அறிவது நல்லது என்றால் இன்னமும் சிறிது 'அப்பட்டம்' தேவைதான்.

அப்போ 'நேக்கடாக' எழுதட்டுமா?

சரி பார்க்கலாம்.

★ சோமசெட்மாம்.
★ ஜேம்ஸ் ஜோய்ஸ்.
★ புதுமைப்பித்தன்.
★ ஜீவா.
★ ஒருபுளிய மரத்தின் கதை.
★ தேவன் வருவாரா!
★ அன்பளிப்பு.
★ சுந்தர ராமசாமி.
★ ரகுநாதன்.
★ மல்லிகை.
★ மாப்பசான்.
★ தி. ஜா.
★ பவர்—வாசகர் பேரவை,
★ குன்றக்குடி.

## குமாரசாமியின் 'குல்மால்கள்'

கொள்கையற்ற காங்கிரஸ் சாவகச்சேரி கும்பலின் துஷ்பிரசாரம் அவர்களுக்கே படுகுழியாக அமைந்து போயுள்ளது.

சாவகச்சேரி மக்கள் மத்தியில் கொள்கை சொல்லி வாக்கு பெற முடியாத குமாரசாமியார் சாவச்சேரி தொகுதியில் நிறுவப்படவிருக்கும் உப்பளத்திற்கு தனது சகோதரனே மேலதிகாரியாக வருகிறார் அதனால் இளைஞர்களே உங்களுக்கெல்லாம் வேலை தருகிறேன், எனக்கு வாக்களியுங்கள் எனக் கேட்டுத் திரிய அவரின் ஆதரவாளர்களுக்கே தலைமை தாங்கி காடைத்தனம் புரியும் ஒரு 'பெரிய மனிதன்' சமீபத்தில் மட்டுவிலில் நடைபெற்ற காங்கிரஸ் வாலிப முன்னணிக் கூட்டத்தில் 'உங்கள் எம்.பி. நிறுவப்போகும் உப்பளத்தினால் கச்சாய் பகுதியை சூழவுள்ள மறவன் புலவு, தச்சன் தோப்பு வயல் வெளிகள் நாசமடையப் போகின்றன அதனால் நவரத்தினத்தை தோற்கடிக்க உதவுங்கள்' என வேண்டிக் கொண்டாராம்.

இதனைக் கேட்டு கை கொட்டி சிரித்த மட்டுவில் விவசாயிகள் நாவற்குழி கைதடியிலுள்ள உப்பளத்தினால் அதனைச் சூழவுள்ள வயல் வெளிகள் பழுதடையவில்லையே என்று கூறிய பொழுது மேறபடி நபர் பதில் கூற முடியாது மழுப்பினாராம்.

முன்னுக்குப்பின் முரண்பாடான கருத்துக்கள் கூறி மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்த குமாரசாமியார் அவரின் ஆதரவாளரின் இக்கூற்றினால் விவசாயிகள் மத்தியில் தலைகாட்ட முடியாத நிலை தோன்றியுள்ளது.

மட்டுவில் பகுதியில் காங்கிரஸ் வாலிப முன்னணி அமைப்பதற்காக மூன்றுமுறைகள் கூட்டம் போட்டும் வாலிப ஆதரவு தங்கவில்லை என்பதால் வாலிபர்களை வலையில் வீழ்த்த புது வழிகளை கையாளலாமா? என யோசனை நடத்தி வருகிறாராம் திரு. குமாரசாமியார்.

# தமிழரசுக் கட்சி கூறும் அரசியல் தத்துவம்!

தமிழரசுக் கட்சி சிங்களவர்களுக்கு எதிரான கட்சி என்ற ஓர் தவறான கருத்து சிங்கள மக்களிடையே இன்று தூவப்பட்டு விட்டது!

தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இன வெறியை வளர்த்து அதன் மூலம் அரசியல் இலாபமடைந்து வரும் விஷமச் சக்திகளின் திட்டமிட்ட சூழ்ச்சியால் ஏற்பட்டுள்ள நிலைமை இது.

தமிழரசுக்கட்சி உண்மையில் சிங்கள மக்களுக்கு எதிரான ஒரு இயக்கமா?
கிடையாது!
தமிழரசுக் கட்சி இலங்கையை இந்தியாவுடன் இணைக்க விரும்புகிறதா?
பைத்தியக்காரத்தனமான கருத்து!

தமிழரசுக் கட்சி இலங்கையை பிளவு படுத்த விரும்புகிறதா?
கிடையவே கிடையாது!

அப்படியானால் தமிழரசுக் கட்சி எதை எதிர்க்கிறது? என்ன கோருகிறது?

தமிழரசுக் கட்சி எதிர்ப்பதெல்லாம் இந் நாட்டின் மீது திணிக்கப்பட்டிருக்கும் ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தை!

பாரதத்தில் மகாத்மா காந்தி எப்படிப் பிரிட்டிஷ் மக்களை நேசித்துக் கொண்டே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி முறையை எதிர்த்தாரோ அதே காந்திய வழியைத் தான் தமிழரசுக் கட்சியும் பின் பற்றுகிறது!

தமிழரசுக்கட்சி சிங்களவரை எதிர்க்கவில்லை—சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறது!

தமிழரசுக்கட்சி சிங்களவர்களிடம் தமிழைத் திணிக்க வேண்டுமென்று கூறவில்லை—தமிழர் மீது சிங்களத்தைத் திணிக்காதே என்கிறது!

சிங்களப் பிரதேசத்தைச் சிங்களவர் ஆளவும், தமிழ் பேசும் பிரதேசத்தைத் தமிழ் பேசும் மக்கள் ஆளவும் வழி வகுக்கும் கூட்டாட்சி அரசியல் முறையையே தமிழரசுக்கட்சி கோருகிறது!

இலங்கை எந்த ஒரு காலகட்டத்திலும் பிரிந்து போகாமல் தடுக்கவே தமிழரசுக் கட்சி சமஷ்டி ஆட்சி கோருகிறது!

சிங்களவர்கள் சிங்களத்தால் ஆளப்பட வேண்டும் என்பதைத் தமிழரசுக்கட்சி எதிர்க்கவில்லை—தமிழ் பேசும் மக்கள் தமிழால் ஆளப்பட வேண்டும் என்று தான் தமிழரசுக்கட்சி கோருகிறது!

வாழு—வாழவிடு—இதுதான் தமிழரசுக்கட்சியின் அரசியல் தத்துவம்!

இந் நாட்டுச் சிறுபான்மை மக்களின் உண்மையான தேசிய இயக்கமே தமிழரசுக்கட்சி!

சிங்களப் பொதுமக்களுக்கு இந்த உண்மைகள் விரைவாக உணர்த்தப்பட வேண்டும்!

—'கோவை'—

## வரப்பெற்றோம்

### அண்ணு கவிதாஞ்சலி:

தொகுப்பு:
சமூகத்தொண்டன்:
விலை-சதம் ஐம்பது.
வெளியீடு:-
212, மொகிதீன் மஸ்ஜிட் வீதி
கொழும்பு-10.

அறிஞர் அண்ணு பற்றிய கலைஞர் மு. கருணாநிதி, சுத்தானந்தபாரதி, கா. அப்பாதுரை, குன்றக்குடி அடிகளார், கவிஞர் காசி. ஆனந்தன், கண்ணதாசன், நாமக்கல் கவிஞர், போன்ற முப்பது கவிஞர்கள் பாடிய கவிதைகளின் தொகுப்பு இது.

## முதற் பரிசு பெற்றார்



மட்டுநகர் மெதடிஸ்ற் மத்திய கல்லூரியில் ஆறும் வகுப்பிற் பயிலும் செல்வன் என். ஜெயராஜ், உபவட்டாரம், வட்டாரம், மாவட்டம் ஆகிய மட்டங்களில் நடைபெற்ற உறுப்பெழுத்துப் போட்டிகளில் மட்டக்களப்பில் 'பி' பிரிவில் தெரிவு செய்யப்பட்டு, அகில இலங்கை ரீதியில் கல்விப் பகுதியால் நடாத்தப்பட்ட தமிழ் தின விழாவில் போட்டியிட்டு முதலாவது பரிசைத் தட்டிக் கொண்டார்.

## ஜீ. சீ. ஈ. பரீட்...

(5-ம் பக்கத் தொடர்சி)

யாளர் மறுபுறமுமாக, இருதலைக் கொள்ளி எறும்பாக மலையகத் தமிழ் பரீட்சார்த்திகள் துயர் துடைக்கக் கல்லூரித் தலைவர்களும், ஆசிரிய சங்கங்களும் முன்வர வேண்டும்.

மலையகப் பரீட்சை நிலையங்களில் தமிழ் சிங்களம் தெரிந்த பரீட்சை மேற்பார்வையாளர் அல்லது தமிழ் தெரிந்த நோக்குனராயினும் கடமையாற்ற வற்புறுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத் தமிழர்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த அறி ஞுறியை நிலை நாட்டியுள்ளது.

III. பெரும்பான்மைத் தமிழ் மக்கள் பெருந்தன்மையாக எமது முயற்சிக்குக் குழுக்கே நில்லாது எமது நியாயமான கோரிக்கைக்கு ஆதரவு தந்து நடவடிக்கைகள் மேற்கொண்டமை பாராட்டக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

(IV) பொதுசன அபிப்பிராயத்தைச் சார்பாக எமக்குப் பெற்றுத்தந்துள்ளது.

(V) ஆட்சியாளர் மத்தியில் எமது கோரிக்கையை உணரவைத்தது

(VI) ஈற்றில் தமிழன் குரலாகவே எமது நடவடிக்கை அமைந்து தமிழர்களுடைய ஒருமைப்பாட்டை வலியுறுத்தியுள்ளது.

இரு பெரும் தமிழ்க் கட்சியினர்களைப் பற்றி எமது சமூகத்தினருக்கு இருந்து வந்த தப்பெண்ணம் தவிடுபொடியாகிவிட்டது. இவ்விரு பெரும் கட்சியினர்களும் எமது முயற்சியின் பாற் காட்டிய பூரண ஆதரவு எமது சமூக நலனுக்காக இக் கட்சியினர் காட்டிய தூய்மையான மாபெரும் ஆதரவாகும். எனவே தமிழ்த்தலைவர்களுடைய கைகளில் தான் எமது விமோசனம் உண்டு என்பதையும் எமது சமூக மக்களுக்கு எமது சென்ற நடவடிக்கை வலியுறுத்திக் காட்டியது மேலும் ஓர் வெற்றியாகும்.

இவ்வாறு மேற் கூறிய அம்சங்கள் யாவற்றையும் ஒன்று சேர்த்து அவற்றை ஆராயின்றபோது எமது சென்றசபைப் பிரதிநிதித்துவ முயற்சி எமது இலட்சியத்தைப் பொறுத்த மட்டில் ஒரு பெரும வெற்றியென்றே நாம் கருதுகிறோம். இதற்காக எமது முயற்சிக்கு ஆதரவு தந்த அரசியல் கட்சிகளுக்கும், தமிழ் அரசியல் தலைவர்களுக்கும், செனட்டர் நீதிராஜா அவர்களுக்கும், எமது இயக்கங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் அகில இலங்கை பனித வுரிமையாளர் இயக்கம் பாராட்டுடன் நன்றி கூறி எமது கடமைப் பாட்டையும் பகிரங்கமாகச் சமர்ப்பிக்கின்றது.

## வி. நவரத்தின ..

(1ம் பக்கம் தொடர்ச்சி)

என்று திரு நவரத்தினம் தமது பிரச்சாரக் கூட்டங்கள் பலவற்றில் கூறிவருகிறாராம்.

அண்மையில் நீர்வேலியில் நடைபெற்ற ஓர் கூட்டத்திலும் திரு. நவரத்தினம் இப்படி உபதேசம் பண்ணியதாக தெரிகிறது.

தம்முடைய ஒரே இலட்சியம்—அடுத்த தேர்தலில் தமிழரசுக்கட்சியைத் தோற்கடிப்பதுதான் என்று திரு. நவரத்தினம் ஒவ்வொரு கூட்டந் தோறும் அடித்து முழக்கி வருகிறாராம்.

தமிழரசுக்கட்சியினரைவிட ' தமிழ் காங்கிரஸ் தமிழ் மக்களுக்கு அதிக நன்மை செய்துள்ள தென்றும் தமிழ்ப் பிரதேசத்தில் தொழிற்சாலைகளை திரு. பொன்னம்பலம் நிறுவியுள்ளதாகவும் திரு. நவரத்தினம் புகழ்மாலை சூட்டி வருகிறாராம்.

ஒற்றையாட்சியின் அடிவருடியான தமிழ் காங்கிரசை, சுயாட்சி கோருவதாகக் கூறிக் கொள்ளும் திரு. நவரத்தினம் ஆதரிப்பதும் தமிழரசுக்கட்சியை அழிக்க அவர் படும் பாடும், அவரது சுயநல நோக்கத்தை தெளிவாகக் காட்டுவதாக மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள்.

தி. மு. க. விலிருந்து வெளியேறிய தமிழ்நாட்டு ஈ. வி. கே. சம்பத் காங்கிரசில் சென்று கலந்து விட்டதைப் போல ஊர்காவற்றுறை 'சம்பத்' ஆன சுயாட்சிக் கழகத் தலைவரும் விரைவில் தமிழ் காங்கிரசில் சேர்ந்து விடலாமென்றும் பேசிக் கொள்ளப்படுகிறது.

## சுயாட்சிக் கழ .

[7ம் பக்கத் தொடர்ச்சி]

படி நீங்கள் நினைப்பது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகத்தான் முடியும் என்பதை அறியத்தருகிறோம்.

இறுதியாக உமக்கு ஒன்று கூறிவைக்க விரும்புகிறோம். இலங்கையில் உள்ள எந்த அரசியல் கட்சிக்கும் இல்லாத கட்டுப்பாடு, கண்ணியம், தமிழரசுக்கட்சி ஒன்றுக்குத்தான் உண்டு என்பதை கட்சியின் கடந்த காலத்தில் வெளியேற்றப்பட்டவர்கள் அன்றும், இன்றும் இருக்கும் நிலைமையையும், சிறிது எடுத்துக் கூறி உமக்கும் காவலூர் தொகுதியில் வரப்போகும் நிலைமையையும் விளக்கலாமென நினைக்கின்றேன்.

### சிவசுந்தரம்

முதலாவதாக கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய முன்னைநாள் கிளிநொச்சி பிரதிநிதி திரு. சிவசுந்தரம் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு பின்பு கடந்த பொதுத் தேர்தலில் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. கா. பொ. இரத்தினதுடன் போட்டியிட்டு 260 வாக்குகளைப் பெற்று கட்டுப் பணத்தை இழந்தார்; பின்பு தமிழ்க்காங்கிரஸ் கட்சியில்சேர்ந்துஇப்பொழுது வெளியேறியுள்ளார்.

### பாலசுந்தரம்

இரண்டாவதாக முன்னைநாள் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பாலசுந்தரம் தீண்டாமை ஒழிப்பியக்கத்தில் கட்சி கட்டுப்பாட்டை மீறியதால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு கோப்பாய்த் தொகுதியில் போட்டியிட்டு 568 வாக்குகளைப் பெற்று கட்டுப்பணத்தை இழந்தார்.

### மாணிக்கம்

மூன்றாவதாக முன்னைநாள் செனட்டர் மாணிக்கம் இலங்கை இந்திய ஒப்பந்த மசோதாவில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். பின்பு அவர் 'ஈழத் தமிழ் விடுதலை இயக்கம் என்ற ஒரு கட்சியை ஆரம்பித்து தலைவராக அந்தக் கட்சியிலிருந்து கல்முனை இடைத்தேர்தலில் போட்டியிட்டு 512 வாக்குகளைப் பெற்று கட்டுப்பணத்தை இழந்தார். அவரது கட்சி போன வழியேதெரியாது.

### 4-வது நவரத்தினம்

நான்காவது ஊர்காவற்றுறை பிரதிநிதியாகிய நீங்கள் அடையாள அட்டை மசோதாவில் கட்சிக்கட்டுப்பாட்டை மீறியதற்காக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டீர்கள்.

கட்சியின் கட்டுப்பாட்டுக் கமைய கிளிநொச்சி பிரதிநிதி. திரு கா. பொ. இரத்தினம் அவர்கள் உங்களுடன் கட்சிக் கட்டளையை ஏற்று காவலூரில் உம்முடன் கட்சிக் கொள்கைகளுக்குன்றிலே நின்று போட்டியிட இருக்கிறார். ஆதலால் நீங்களும் காவலூர் மக்களிடம் இருந்து கட்டுப் பணத்தை இழக்க காவலூர் மக்கள் வழிகாட்டுவார்கள் என்பதையும், எதிர்வரும் தேர்தல் நிரூபிக்கும்.

## நாவலப்பிட்டி ..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்புவதற்குத் தயங்குவதும், இன்னோர் அபேட்சருக்காக வக்காலத்து வாங்குவதும் ஏன் என்று அவ் வட்டாரப் பெரும் பான்மையான வாக்காளர்கள் கேள்வி எழுப்பிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்! 5ம் திகதி அவர் தனது அபேட்சை மனுவைத் தாக்கல் செய்வதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாதென அவருடன் [illegible] சிலர் என்னிடம் கூறினர்.

# உரிமைபடைத்திருந்த மலையக மக்களை உரிமை இழக்கச்செய்த இரு சட்டங்கள்!

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதைக் கிள்ளியெறிவதற்கு வழியென்ன என்ன யோசித்தார் பெரிய சேனநாயகா!

அதன் பயனாக உருவானது இரு சட்டங்கள். ஒன்று இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம்; மற்றது இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம்!

இந்த இரு சட்டங்களும் தாம் மலைநாட்டுத் தமிழனை அரசியல் அனாதையாக்கியது, கண்ணிருந்தும் குருடர்களாய் வாயிருந்தும் ஊமையராய் அவர்கள்வாழ வேண்டிய ஒரு நிலையை இவ்விரு சட்டங்களும் தாம் ஏற்படுத்தின.

இவ்விரு சட்டங்களையும்,

மலைநாட்டிலிருந்து பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளாக வந்திருந்த ஏழு தமிழ் பிரதிநிதிகளும் மூர்த்தண்யமாக எதிர்த்தனர்!

அன்றைய சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்த்தன!

இன்றைய தமிழரகத் தலைவர்கள் எதிர்த்தனர்!

அப்பொழுதுதான் தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் தீர்க்க தரிசனத்துடன் கூறினார்—'இன்று இந்திய தமிழர்களுக்கு அடிவிழுகிறது—நாளை இதே அடி இலங்கைத் தமிழனுக்கும் விழும்' என்று!

செல்வாவின் அன்றைய அரசியல் தீர்க்கதரிசனம் எவ்வளவுதூரம் உண்மையாகி விட்டதென்பதை அனுபவ பூர்வமாக தமிழ் மக்கள் இன்று உணர்ந்து கொண்டு விட்டார்கள்.

இத்தனைபேர் எதிர்த்த சட்டத்தை — 10 இலட்சம் மலை நாட்டுத் தமிழர்களை அரசியல் அனாதைகளாக்கி—நாடற்றவர்களாக்கிய சட்டத்தை—திரு. பொன்னம்பலம் ஆதரித்தார் என்பது தமிழர் வரலாற்றிலுள்ள கறைபடிந்த உண்மை!

மலைநாட்டுத் தமிழர் பிரச்சினை என்றோர் பிரச்சினை இந்நாட்டில் தோன்றுவதற்கே காலாக இருந்தது பொன்னம்பலம் ஆதரித்த இந்தச் சட்டங்கள்தாம்!

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை நான் ஆதரிக்கவில்லை—எதிர்த்தேன் என்று பொன்னம்பலம் வாதிடலாம். அந்தச் சட்டத்தை பொன்னம்பலம் எதிர்த்துப் பேசவில்லை—எதிர்த்து வாக்களித்தார் என்பதை நாம் மறுக்கவில்லை.

திரு. செல்வநாயகம் எதிர்த்துப் பேசியதுடன் எதிராகவும் வாக்களித்தார்.

ஆனால் அச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கக் கூடாது என்று தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களாக இருந்த அறுவரில் மூவருக்கு திரு. பொன்னம்பலம் வாய்ப்பூட்டு போட்டதை அவர் மறுக்க முடியாது! அப்படி பொன்னம்பலத்தால் வாய்ப்பூட்டு போடப்பட்டு, அச் சட்டத்தை எதிர்க்க முடியவில்லையே என்று கண்ணீர் விட்டழுதவர்களில் ஒருவர் காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம்.

மந்திரிப்பதவிபெற வேண்டும் என்ற ஆசையில்—டி. எஸ். சேனநாயகாவைப் பகைக்க விரும்பாது நல்ல பிள்ளையாக நடப்பதற்காகத்தான் திரு. பொன்னம்பலம் இப்படி நடந்து கொண்டார் என்பது நாடறிந்த உண்மையாகும்.

அடுத்த வாரம்:—

(இலங்கை இந்திய காங்கிரசுக்கு பொன்னம்பலம் அளித்த வாக்குறுதி)

## தமிழ் இனத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மை மக்கள் மத்தியில் உங்கள் கோரிக்கையின் பயனால் பேதங்கள் தோன்றவும் ஒற்றுமை கெடவும் கூடிய ஆபத்து ஏற்படும் என்பதை இன்னும் நீங்கள் உணர மறுக்கிறீர்கள்! உங்கள் இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கை— தமிழினத்தின் ஐக்கியத்தை வேரோடு கெல்லியெறியவே வழிவகுக்கிறது.

எனவே தயவு கூர்ந்து தமிழினத்தை மீண்டும் பிரிப்பதற்குக் காலாக இருக்காதீர்கள். இதுவே தமிழ் பேசும் மக்களுக்கு நீங்கள் செய்யும் பெருநன்மையாகும்.

இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கையைக் கைவிடும்படி உங்களைத் தமிழ்த் தாயின் பெயரால் கேட்டுக் கொள்ளுகிறோம். இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு, தமிழ் பேசும் மக்களுக்குப் பொதுவான ஓர் முழுமை பெற்ற பல்கலைக்கழகத்தைத் தமிழ்ப் பிரதேசங்களுக்குப் பொதுவான ஓரிடத்தில் நிறுவும்படி அரசாங்கத்தை வற்புறுத்துங்கள்.

மழவராயர், நாவலர்' இராமநாதன் போன்றவர்கள் இந்து சமய வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ளதாக நீங்கள் கூறும் சொத்துக்கள் இருந்தால் அதை இந்துமத வளர்ச்சிக்குப் பயன் படுத்தலாம்.

தமிழ்பேசும் மக்களிடமிருந்து வரியைப் பெறும் அரசாங்கம், தமிழ் பேசும் மக்களுக்கான பல்கலைக் கழகத்தையும் தனது செலவிலேயே நிறுவி நிர்வகிக்க வேண்டும். தமிழினத்துக்கு கிடைக்க வேண்டிய இந்த உரிமைக்காக அரசாங்கத்திடம் வாதாடுங்கள்.

தமிழினத்தின் இக்கோரிக்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்து-தொடர்ந்தும் இந்துப் பல்கலைக் கழகக் கூச்சலை எழுப்பி தமிழ்பேசும் மக்களைக் கூறுபோட முனைந்தால், அதற்கான பிரதிபலனை அடுத்த தேர்தலின் போது நீங்கள் அனுபவிக்க [illegible] தெரிவித்துக் கொள்கிறோம்.

## தமிழுரிமையை ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு சிங்களத்திலே உத்தியோகபூர்வமான கையொப்பமிடப்பட்ட மறுமொழியும் தமிழில் அதன் கையொப்பமில்லாத அதன் மொழிபெயர்ப்பும் அரசாங்கத்தால் அனுப்பப்பட்டு வருகிறது.

இப்படிச் செய்வது தமிழ் மொழிச் சட்டத்துக்கும் அதன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கும் முரணானது என்றும் தமிழில் எழுதப்படும் கடிதத்துக்கு தமிழில் கையொப்பத்துடன் பதில் தரப்பட வேண்டுமென்றும், தமிழில் உத்தியோக பூர்வமான கையெழுத்தின்றி அனுப்ப படும் மொழிபெயர்ப்பு "மறுமொழி" ஆகாதென்றும் திரு. இரத்தினம் பா. உ. பல மாதங்களாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியும், நிதியமைச்சருக்கும் பிரதமருக்கும் கடிதங்கள் எழுதியும் வந்தது தெரிந்ததே.

திரு. இரத்தினத்தின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த உதவி நிதியமைச்சர் திரு. விமலசேன தமிழ்க் கடிதங்களுக்கு தமிழில் மொழிபெயர்ப்பு அனுப்பப்படுவதால் மொழி பெயர்ப்பில் கையெழுத்திடுவது முடியாத காரியம் என்று அண்மையில் தெரிவித்திருந்தார்.

தமிழ்க் கடிதத்துக்கு தமிழில் உத்தியோக பூர்வமான கையெழுத்துடன் கூடிய பதில் அனுப்பப்பட வேண்டும் என்ற தமிழரசார் கோரிக்கையை நிதியமைச்சர் நிராகரித்து விட்டதாக 'சன்' ஆங்கில ஏடு கடந்த வாரம் ஒரு செய்தி வெளியிட்டு இருந்தது.

## ஆர். ஜி. ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது விடை கிடைத்து விட்டது.

திரு. இராசலிங்கம் ஓர் தமிழர் என்றும் தமிழர் ஒருவர் - அவர் சிறுபான்மையாக இருந்தாலென்ன பெரும்பான்மையாக இருந்தாலென்ன - செனட்டராகத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியானவரான ஆர். ஜி தமது வாக்கை அளிக்கக் கூடாதென்றும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும் பௌத்த காங்கிரஸ் பிரமுகர்களும் ஆர். ஜி. யைத் தடுத்து விட்டதாகத் தெரிகிறது.

இதனால் தான் திரு. ஆர். ஜி. சபைக்கு வராமல் மௌனம் சாதித்து விட்டாரென்றும் அறியப்படுகிறது.

பௌத்தத்தை ஏற்று சிங்களத்தைப் படித்துச் சிங்களவராக மற்றினால் தமது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடுமென்று தவறாகக் கருதும் சில சிறுபான்மைத் தமிழர்களின் கண்களை ஆர். ஜி.யின் நடவடிக்கை திறந்துவிடும் என்று நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா காவியம்



முத்து

## பட்டதாரி

வட்ட நிலாவிலொன்றை — உணர்வு
வழங்கும் தமிழ் மகளை — அழகன்
கட்டி மணையறத்தே — சுகங்கள்
கனிய மகிழ்ந்திடு நாள் — இளைஞன்
தொட்டுப் படித்த கல்வி — பயனைத்
தூக்கிக் கொடுத்ததுபோல் — கலையின்
பட்டம் கிடைத்ததம்மா! — அழகன்
பழமாய்க் கனிந்துவிட்டான்!

வண்ண நிலாப் பழுத்தால் — திசைகள்
வளைத்த இருள் தொலையும்! — அழகுப்
பொன்னின் வயல் பழுத்தால் — வறுமை
பொடிப் பொடியாய் நொறுங்கும் — இனிய
பெண்ணுர் மனம் பழுத்தால் — அரக்கர்
பித்த மனம் அழியும்! — இளைஞன்
அண்ணுத் துரை பழுத்தான்! — தமிழர்
அடிமை தொலைந்ததடா!

நாட்டின் துயர் நினைந்தே — இளவல்
நாலும் படித்துயர்ந்தான்! — தனது
வீட்டை நினைந்ததில்லை! — பதவி
விரும்பிப் படித்ததில்லை! — தனக்கோர்
தோட்டம் நினைத்ததில்லை! — பணத்தைச்
சிறிதும் மதித்ததில்லை! — தமிழர்
கோட்டை அமைக்கவென்றே — படித்தான்
குன்ருய் நிமிர்ந்து நின்றன்!

மண்ணின் உயரத்திலே ... — நெடிய
மலைமேற் பிறந்திடினும் — அழகுப்
பொன்னி நதி தமிழர் — நிலத்தே
புரண்டு மகிழ்ந்தது போல் — அழகன்
பன்னுள் முயன்றெடுத்த — புகழ்சேர்
பட்டம் உயர்வளித்தும் — தமிழர்
மண்ணை மறக்கவில்லை...! — தமிழ்த்தாய்
மகிழ விழித்தெழுந்தான்!

அலுவலகத்தினிலே — விசிறி
ஆட்டும் இளந் தென்றலில் — சுகங்கள்
தழுவக்கூடியிருந்து — பகைவர்
தரும்கூழ் தனில் மகிழும் — எளிய
தொழிலை விரும்பவில்லை...! — இளைஞன்
தொழும்பை விரும்புவனே? — வெறிகொள்
புலியின் வடிவினைப்போல் — நெடுவான்
புயல் போல் உலவி நின்றன்!

அன்னைத் தமிழ்புலம்ப — வானின்
அழகு நிலாச் சரிந்து — புவியின்
மண்ணில் விழுந்த தொப்ப — தமிழர்
மானம் நொறுங்கிவிழ — தமிழ்மண்
இன்னல் உறும்பொழுதில் — பதவி
எச்சில் மகிழ்வதொடா? — எனத்தன்
கண்ணில் நெருப்பெரிய — இளைஞன்
கடல் போற் குமுறி நின்றன்'

கோடிப்பட்டம் பெறலாம் — ஒருவன்
கொள்ளைப் பணம் பெறலாம் — நெடிய
மாடி மனை பெறலாம் — பதவி
மலையளவு பெறலாம் — தமிழை
ஈடுவைத்துப் பெறவோ? — அவைகள்
இனத்தை விற்றுப் பெறவோ? — அடநாம்
மாடு பெற்ருே பிறந்தோம்? — உணர்ச்சி
மறந்த தமிழ்க் குலமே!

அண்ணுத் துரைத்தமிழன் — மலைத்தோள்
அரசர் குலத் தமிழன் — தொழும்பை
எண்ணு முழுத்தமிழன் — தமிழ்த்தாய்
ஈன்ற மறத்தமிழன் — குலமே
கண்ணுய் விழித்தெழுந்தான்! பகைவர்
காணக் கொதித் தெழுந்தான்! — அழகுப்
பொன்னுய் உடல் சிவக்கத் — தமிழ்த்தாய்
பொங்கிக் களித்தாளம்மா!

## காலம்

அந்தக் காலம் அடிமைத் தமிழ்க்குலம்
முந்தைக் குலப்புகழ் முழுதும் தொலைத்து
மாற்ருர் போட்ட எச்சிலை மடியில்
ஏற்று மகிழ்ந்த எளிய காலம்!
பாரதி எனுமோர் பச்சைத் தமிழன்
சீரெழில் விழிகள் இரத்தம் சிந்தி
அழுத காலம் அந்தக் காலம்!
'விதியே விதியே தமிழச் சாதியை
என்செயக் கருதி இருக்கின் ருயடா?'
என்றக் கவிஞன் எரிதழல் மிதித்த
கன்ருய்க் கதறி வெடித்த காலம்!
பாரதிக் கவிஞன் பத்தாய்க் கதறியும்
ஊரார் கொஞ்சமும் உணரா திருந்ததால்
மன்னர் முடிபோல் தலைப்பா கையுடன்
தன்னை அழகு படுத்திய பாரதி
அடிமைக் குலத்தில் வாழா தகன்று
பாடை ஏறிப் பவனி போயினன்!
முற்ருய் வீரம் முழங்கு முன்னமே
குட்டிச் சிங்கம் குழிக்குப் போனது!
நாலு திசைகளும் தன்கொடி நாட்டி
ஞால முழுவதும் ஆண்ட தமிழ்க் குலம்
கோலம் குலைந்து கூனி வளைந்து
தாளம் போட்டுப் பிழைப்பதே பிழைப்பென
நாளும் பொழுதும் நம்பிய காலம்!
அந்தக் காலமே அண்ணுத் துரையான்
செந்தமிழ்த் தாயின் சிறுமணி வயிற்றில்
உறையிடை வாள்போல் உருவம் தாங்கி
நிறைபிணித் தமிழர் நிலமிசை உயிர்த்தான்...
அற்றை நாளை ஆரும் மறப்பரோ?
காலம் படைத்த காஞ்சித் தலைவன்...
வேழ நடையொன் றுடையோன் வீரம்
இதுவெனக் காட்டப் பிறந்த எரிமலை...
பொதிகைத் தமிழின் காவல் வரிப்புலி...
செங்கண் இரண்டு கொண்டோன்... உணர்ச்சி
பொங்கிப் பாயும் பொன்னிப் பெரும்புனல்
ஆழக் குமரிக் கடலிடை சுழலும்
நீள நெடுஞ்சுழு பகைவர் நெஞ்சை
உடைக்கப் பிறந்த ஓசைப் பெரும்புயல்...
வெடிக்கும் நெஞ்சோ டருவிழி திறந்தான்...
ஐந்து நிலத்திலும் தமிழர் அருங்குலம்
நைந்து நைந்து நைந்து கிடந்ததே!

**காசி ஆனந்தன்**

## கர்ப்பக் கிருகம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

'கல்...கல்யாண விடயமாகவா? அதுதான் எல்லாம் நிட்சயமாகி விட்டதே. டேட் கூட தீர்மானிச்சே.'

'அதில்லை பிரகாஷ்.'

'வேறு எதைப்பற்றி?'

'உங்கள் கல்யாண விடயம் பற்றி?'

'அதற்கு இப்போ என்ன அவசரம்?'

'பிரகாஷ் நான் சொல்வதைக் கொஞ்சம் ஆறுதலாகக் கேட்பீர்களா?'

'ஓ. கே. ஓ. கே' என்று கூறிவிட்டு கையிலிருந்த புத்தகத்தை மூடி மேசை மீது வைத்தான்.

'பிரகாஷ் நீங்கள் இனியும் தனித்திருப்பதை நான் விரும்பவில்லை.'

'அதற்காக?'

'சுகுணவின் திருமணம் முடிந்தால் சுகுண அண்ணனுடன் யாழ்ப்பாணத்தில்தான் தங்க நேரிடும். நீங்கள் தனித்து இருக்க நேரிடும். ஆகவே உடனே திருமணத்துக்கு நடவடிக்கை எடுங்கள்' என்ருள்.

'புனிதம், நான் இவ்வளவு காலமும் தங்கையுடனிருந்தேன். அதற்கு முன்பும் தனியத்தானே இருந்தேன்; அப்படித்தான்' என்று இழுத்தான்.

'பிரகாஷ் நான் பலதையும் உத்தேசித்துத்தான் கூறுகின்றேன். உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள் பிரகாஷ். இலவேளை உங்கள சொந்த விடயத்தில் தலையிடுகின்றேன் என்றும் நினைப்பீர்கள். ஆனுல் சுகுணவுக்குத் திருமணம் முடிந்த பின்பு நான் இங்கு வந்துபோக வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களா?'

'புனிதம் வட் இஸ் திஸ். நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?'

'பிரகாஷ். உங்களிடம் நான் மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கின்றேன்.'

'இல்லை என்று சொன்னேனு?'

'அந்த மதிப்பும் மரியாதையும் என்றும் நிலைத்திருக்கவேண்டும். அதுமட்டுமல்ல உங்களோடு பழகும் ஒவ்வொரு வினுடியும் என் உள்ளம் ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்துவிடுகின்றது. அதே வேளையில் சுகுணவுக்குத் திருமணம் முடிந்துவிட்டால் அவள் இங்கு இருக்க மாட்டாள்.'

'ஆமாம். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?' என்று கேட்டான் பிரகாஷ்.

'பிரகாஷ் நான்... என்னுல் எப்படிச் சொல்வதென்று புரியவில்லை. உண்மையில் என்னை நீங்கள் புனிதமான எண்ணங்களுடன் நேசித்தால் என வேண்டுகோளை ஏற்பீர்கள் என்றே எண்ணுகின்றேன். அதாவது சுகுணவுக்கும் அண்ணனுக்கும் திருமணம் நடக்கும் அன்றைய தினத்தில் உங்களுக்கும்...'

'புனிதப்' என்று கூறியவன் மேலே எதுவும் பேசாமல் அவளையே விழுங்கி விடுவதுபோலப் பார்த்தான் பிரகாஷ்.

# இழந்த உரிமைகளைப் பெற போராட்டமே ஒரே வழி!

## காவலூரில் பண்டிதர் பேச்சு!

"இவ்வளவு தொலையாக நீங்கள் தமிழரசுக் கட்சிக்கிளை நிறுவும் கூட்டத்துக்கு வருகை தந்திருப்பது மிகுந்த ஊக்கத்தையும் ஆக்கத்தையும் நல்குகின்றது. ஊர்காவற்துறைத் தொகுதி தமிழரசுக் கட்சியின் கோட்டை என்பதை உங்கள் அன்பும் ஆதரவும் நன்கு நிலை நாட்டுகின்றன" என்று திரு. கா. பொ. ரத்தினம் பா. உ. ஊர்காவற்துறைத் தமிழரசுக் கட்சிக் கிளை நிறுவற் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் பொழுது குறிப்பிட்டார்.

ஊர்காவற்துறைச் சந்தையில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:

"நாம் இழந்த உரிமைகளை தொடர்ந்து போராடியே பெறவேடிண்டியுள்ளது. தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஓர் அரசியற் கட்சியினை ஆதரித்து ஒரு கொடிக்குக் கீழ் ஒரு தலைவர் காட்டும் வழியைப் பின்பற்றினுல் அன்றி உரிமைகளைப் பெறல் முடியாது. இன்று எங்குமுள்ள தமிழ் மக்களிலே பெரும்பாலாரின் ஆதரவைப் பெற்ற கட்சி தமிழரசுக்கட்சியே என்பதையும் அதை ஆதரித்து வளர்ப்பதாலேயே தமிழ் மக்கள் உரிமைகளைப் பெறவாய்ப்புண்டு என்பதையும் தமிழ் மக்கள் எல்லோரும் நன்கு அறிவர். எனவே எல்லோரும் தனிப்பெரும் "கட்சியாகிய தமிழரசுக் கட்சியை ஆதரித்து உரிமைப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவோம்"

திரு. க. ஆசைப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நாரந்தனை முன்னை நாள் கிராமசபைத் தலைவர் திரு. ச. அருமைநாதர் பேசுகையில் "தமிழரசுக் கட்சியை பெலவீனப் படுத்த முடியாது. இன்றைய சூழ்நிலையில் ஆளுக்கொரு அரசியற் கட்சி அமைப்பதால் எந்த நன்மையும் உண்டாகாது. இது தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைக்கும் செயலாகும்" என்று கூறினுர்.

திருவாளர்கள் இ. சோமசுந்தரம் ஆ. சந்திரசேகரம் க. சேனுதிராசா முதலிய பலர் பேசினர். ஊர்காவற்துறைத் தமிழரசுக் கட்சிக் கிளையின் அலுவலர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. ஆசைப்பிள்ளை துணைத்தலைவர்: ஜி. ஏ. பெர்னுண்டோ, செயலாளர்: இ. சோமசுந்தரம், துணைச்செயலாளர்: அ. பத்திநாதன், பொருளாளர்: அ. பிரான்ஸிஸ்.

15 பேரைக் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### மண்கும்பான் கிளை

தமிழரசுக் கட்சியின் மண்கும்பான் கிளை நிறுவற் கூட்டம் திரு சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் உபதபால் நிலைய முன்றலில் நடைபெற்றது.

திருவாளர்கள் க. பொ. இரத்தினம பா. உ. செ.




செல்வரத்தினம், வை. குணரத்தினம், த. தட்சணமூர்த்தி, இரத்தினராசா, ஆ. சந்திரசேகரம், என். கே. தர்மலிங்கம், ஜெயராமன் முதலியபலர் பேசினர்.

மண்கும்பான் தமிழரசுக் கட்சிக் கிளை அலுவலாளர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. கணபதிப்பிள்ளை, துணைத்தலைவர்: செ. திருநாவுக்கரசு, செயலாளர்: வை. குணரத்தினம், துணைச்செயலாளர்: செ. செல்வரத்தினம், பொருளாளர்: மு. குமாரசாமி.

14 பேரைக் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு அரசு இழைக்கும் கொடுமை

## சிங்களப் பரீட்சை சித்தியடைந்த பின்பும் ஏனிந்த கொடுமை? எதற்கு இந்த அநீதி?

குறிக்கப்பட்ட சிங்களத் தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்த பின்பும் புது அரசாங்க ஊழியர்கள் பலர் தண்டிக்கப்படுகிறார்கள். • 4-9-66 திகதியிடப்பட்ட 701-ம் இலக்க நிறைசேரிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் புது அரசாங்க ஊழியர்களுக்கு 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் வரை சித்தியடைவதற்காக மூன்று வருடகால அவகாசம் கொடுக்கப்பட்டது.

சிங்களம் படிப்பதற்கேற்ற வசதியீனங்களாலும், தனிப்பட்ட கஷ்டங்களாலும் பல புது ஊழியர்கள் அந்த மூன்று வருடகால எல்லைக்குள் சித்தியடைய முடியாமற் போய்விட்டது. என்றாலும், அவர்கள் தங்கள்முயற்சியினால் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலும், 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதத்திலும் நடந்த இரண்டு பரீட்சைகளிலும் தேவையான தரத்தில் சித்தியடைந்திருக்கிறார்கள்.

இவ்விரு பரீட்சைகளிலும் சித்தியடைந்த புது ஊழியர்கள் தங்கள் நிறுத்தப்பட்ட சம்பள உயர்வு, சேவை உறுதிப்படுத்தல், சேவை முதுமை சம்பந்தமாகத் தமது நிலைக்களத் தலைவர்கள் மூலமாத் நிறைசேரிச் செயலாளருக்கு விண்ணப்பித்தும் இதுவரை அவர்களின் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பள உயர்வு, சேவை உறுதிப்படுத்தல், சேவை முதுமை சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால், பல ஊழியர்கள் 22-11-69ல் நடைபெற விருக்கும் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பு இரண்டாந்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உரிமையுடையவர்களாக இருந்தும் அனுமதி வழங்க மறுக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் இதுவிடயமாக தங்கள் தொழிற் சங்கங்கள் மூலமாகவும், தமிழ் அரசியற் தலைவர்களை நேரிற் கண்டும், அவர்களுக்கு எழுத்து மூலமாக தங்கள் இன்னல்களை விளக்கியும், எதுவித பலனும் அற்றுத் துன்புறுகிறார்கள்.

அரசாங்க ஊழியர்களுக்கு நடாத்தப்படும் தகுதிகாண் சிங்களப் பரீட்சையின் தரம் கடுமையானது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஏதோ பெரிய சலுகை செய்வதாகக் காட்டி, முன்னைய அரசாங்கம் இருக்கும்போது வைத்த நான்கு பிரிவையும் மூன்றாகக் குறைத்துவிட்டு, பரீட்சையின் தரத்தைக் கூட்டிப் பல ஊழியர்கள் சித்திபெறுவதைக் கஷ்டமாக்கியுள்ளது.

இதுபற்றி, வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தும் இதுவரை பரீட்சைத் தரம் குறைக்கப்படவில்லை. அப்படியிருந்தும் தங்கள் விடா முயற்சியால், பரீட்சையிற் சித்தியடைந்தும், அரசாங்கம் கொடுத்த காலஎல்லை 1968ம் ஆண்டு ஜூலை மாதத்துடன் காலாவதியாகிவிட்டது என்ற ஒரே காரணத்தினால் இவ் ஊழியர்கள் சம்பள உயர்வு, சேவை உறுதிப்பாடு, சேவை முதுமை அற்று நடைப் பிணம் போல் அரசாங்க சேவையில் இருக்கிறார்கள்.

சிங்களத் தேர்ச்சிப்பரீட்சையிற் சித்தியடைந்த பின்பும் சம்பள உயர்வு இல்லை— சேவை முதுமை இல்லை — பதவி உறுதிப்பாடு இல்லை என்றால் எதற்காகக் கஷ்டப்பட்டுச் சிங்களம் படிக்கவேண்டும் என்று புதிய தமிழ் ஊழியர்கள் அங்கலாய்க்கிறார்கள்: பல்லின மக்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவதாகப் பறைசாற்றும் தேசிய அரசாங்கம் சொல்வதொன்று, செய்வதொன்றாக சித்தியடைந்த தமிழ் ஊழியர்களைத் தண்டிப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது!

பிரதம மந்திரி, நிதி மந்திரி அவர்களின் கவனத்திற்குத் தமிழ் அரசியற் தலைவர்கள் இவற்றைக் கொண்டு வந்து மேலும் இவ்வுழியர்கள் தண்டிக்கப்படாவண்ணம் சேவை மூப்பு, சேவை உறுதிப்பாடு, சம்பள உயர்வு ஆகிய தங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்வார்களெனத் தங்கள் மதிப்பிற்குரிய பத்திரிகை வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**க. தம்பிராசா**
மன்னர்

---

**வன்னிநாடு தந்தபெருவீரன் —வண்டமிழர் இனத்தின் மானம் காத்த மறவன் — அந்நியனுக்கு தலைவணங்க மறுத்த விறல்வேந்தன் பண்டார வன்னியனின் நினைவுதினம் 31.10.69 ஆகும். அதையொட்டி இக்கட்டுரையும் கவிதையும் இடம் பெறுகின்றன.**

---

# வன்னி நாட்டின் வீரத் திருமகன்

வானம் பொழிகின்றது. பூமி நனைகின்றது பயிரும் வளர்கின்றது. பசியும் தணிகின்றது குயில்பாடுகின்றது மயில் ஆடுகின்றது. இளி மழலை பொழிகின்றது. இப்படிச் செயற்கையின்றி இயற்கையழகு கொண்டு விளங்கியது வன்னி இராச்சியம்.

இந்த இராச்சியத்தின் எல்லைகளுக்குள் போர் கண்டு அஞ்சும் கோழைகள் இல்லை. வேல் கண்டு அஞ்சும் வீரர்கள் இல்லை. எதிரிகளின் வேல் வரும்போது கண்ணிமைப்பது கூடக் கோழைத்தனம்-தமிழ் பண்பாட்டுக்கு அடியாத வசை—என்று கண்ணிமைக்காது எதிரியின் வேல் தடுத்து வெற்றிபெற்று நாடு திரும்பும் நற்றமிழ் வீரர்கள் தான் இருந்தார்கள். இவர்கள் தரத்திலே உயர்ந்தவர்கள். தமிழிலே அழியாத அன்பு கொண்டவர்கள்: பிறந்த நாட்டிற்குப் பேசும் மொழியாம் நற்றமிழுக்கும் தொண்டு செய்யவென்றே பிறந்தவர்கள்.

இவர்கள் மத்தியிலே என்றும் அஞ்சாத வீரமும் அழியாத வைராக்கியமும் கொண்டவனாக வந்துதித்தான் வன்னி நாட்டுச் சிங்கம் வண்டமிழ் வீரன் பண்டார வன்னியன்.

அரச குலத்திலே பிறந்தான் அரச குலத்திலே வளர்ந்தான். அரசனாகி ஆட்சிபுரிந்தான் — நண்பனுக்கு நண்பன். பகைவனுக்குப் பகைவன், ஏழைக்கு ஏழை. வீரனுக்கு வீரன் கோழைக்குக் கோழை. இப்படி பல அவதாரங்கள் கொண்டு நாட்டையும் நாட்டுமக்களையும் காத்து வந்தான். இதனால் வன்னி நாடு செல்வம் செழிக்கும் செந்தமிழ் நாடாக விளங்கியது.

ஈழ நாட்டில் புகுந்த அந்நியர், அடர்ந்த வனங்கள் —

**க நவரத்தினம்**

வானளாவ வளர்ந்த மரங்கள் மன்னனின் ஆட்சியிலே அதிக மகிழ்வுற்று பரந்து விரிந்து விண்ணிலே ஓடித்திரியும் கருமுகில் கூட்டங்களைத் தடுத்து மன்னனின் ஆட்சியை மனமுவந்து மகிழ்ந்து கூறி, இவனல்லவோ மன்னன்? இவனது ஆட்சியல்லவா ஆட்சி. இந்தப் பிரதேசத்தில் அல்லவா மழை பொழிய வேண்டும் என்று கூறி மழை பொழியச் செய்யும் இந்த வன்னி நாட்டில் ஆசை [illegible] அதை நெருங்க முடி[illegible] திரும்பி விட்டனர்.

போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் இந் நிலையில் ஈழத்தை விட்டுச் சென்றனர். இந்த நேரத்தில் வந்தவர் ஆங்கிலேயர் கேட்டனர் நாட்டை. ஆணவம் படைத்த அந்த ஆங்கிலேயரிடம் ஆதி தொட்டு ஆண்டு வந்த அருமைத் தமிழ் நாட்டை விட்டுக் கொடுக்க முடியுமா? வீரம் படைத்த பண்டார வன்னியன் வெகுண்டெழுந்தான் கொண்டான். நாட்டைக் கொடுப்பதா? நடக்காத காரியம் நாளைக்கே போருக்கு வாருங்கள் உங்களுக்கு சமாதி கட்டி விடுகின்றேன் என்று வீரம் கூறி தூதுக்கு வந்தவனைத் துரத்திவிட்டான்.

பாவம் பண்டார வன்னியன்! விதி சதிசெய்வதை எப்படி அறிவான். பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக இருக்கும் காக்கை வன்னியனின் சூழ்ச்சித் திட்டத்தை எப்படி அறிவான்? இவன்தான் சூழ்ச்சிக்காரன் என்று அன்று அறிந்திருந்தால் அன்றே இந்தக் காக்கை வன்னியர் கூட்டத்தை அழித்திருப்பான். அன்றே காக்கை வன்னியர் கூட்டம் அழிந்திருந்தால் இன்றாவது நமது இனம் பிழைத்திருக்கும்.

[illegible] யரின் செல்லப் பிள்ளையாக காக்கை வன்னியன் வீற்றிருந்தான். இதனால் பண்டார வன்னியன் போரிலே சிறைப்பட்டான். அத்துடன் வன்னி இராச்சியமும் வீழ்ந்தது.

---

பண்டார வன்னியன் போல்...

## தாய்நாட்டிற்காக வாழு!

"வன்னியூர்க் கவிராயர்"

வற்றாத வளமிக்க வன்னிநாட்டில்
வாட்சின்னம் பொறித்தகொடி வானளாவி
நற்கம்பத் திற்பறக்க அடங்காப்பற்றை
நல்லரசு புரிந்திட்ட இறுதிமன்னன்
'கற்பூரப் புல்வெளி'க்குத் தனித்துச்சென்று
கலங்காமற் பகைவரொரு படையைத்தாக்கி
மற்செய்து வாள்வீச்சின் திறனென்றாலே
மாற்றாரிற் பலரையுயிர் மாய்த்த வீரன்...
"இத்தரையில் வாழ்ந்திட்டால் சுதந்த்ர வாழ்வின்
றேல் மரணம் மேல்" என்று துணிந்து நின்று
யுத்தபலம் வாய்ந்த வெள்ளை மனிதர் முன்றில்
உறுத்தியுரைத் ததைச் செயலிற்
கடைப்பிடித்தோன்;
நித்திரையிற் சொப்பனத்தும் அடிமை வாழ்வை
நிராகரித்தோன்; சுதந்திரத்தன் மானத்திபம்
நித்தியமும் மக்கள் நெஞ்சத் தேற்றி வைத்தோன்
நிகரற்றோன் பண்டார வன்(னி)யனுமே!

(வேறு)

ஈழத்துக் கட்டப் பொம்மன்
எனவுதித் தோன்; தாய்நாட்டை
வாழவைத் திடுத லொன்றே
வாழ்விலட்சி யமாய்க் கொண்டோன்
ஈழமும்...எழிலார் வன்னி
யும்...தமி ழினமும் நீடு
வாழுமே நீ பண்டார
வன்னிய னுருக் காலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரையிடும் நன்னாளை எதிர்பாருங்கள்!

தீபாவளித் திருநாளை விமரிசையாகக் கொண்டாட

சிலோன் எண்டடெயின்மெண்ட்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கவிருக்கும் அரும்பெரும் படைப்பு. மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் இலட்சிய தயாரிப்பு

# அடிமைப் பெண்

(இஸ்ட்மன் கலர்)

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, மனோகர், அசோகன், சோ, ராஜஸ்ரீ, ஜோதிலட்சுமி, பண்டரிபாய் மற்றும் பலர் நடித்தது.

கதை, வசனம்: எம். ஜி. ஆர். டைரக்ஷன்: கே. சங்கர் இசை கே. வி. மகாதேவன்


இப்பொழுது வெற்றியுடன் காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் (மருதானையில்) எம்.ஜி.ஆர். பி. சரோஜாதேவி, தங்கவேலு, எம். சரோஜா நடித்த

## திருடாதே

சிலோன் தியேட்டர்சாரின் மகத்தான தீபாவளி வெளியீடு!

காணத் தயாராகுங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் பற்றிய கதை




சிரிப்பு நடிகர் நாகேஷ், சுந்தரராஜன், சௌகார் ஜானகி, ஜெயந்தி, எம். ஆர். ஆர். வாசு, முத்துராமன், மனோரமா மற்றும் பலர் நடித்த

5வது வாரமாக காட்சியளிக்கிறது

செல்லமகாலில்

ரவிச்சந்திரன், ஜெயலலிதா நடித்த

## அன்று கண்ட முகம்



3வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நாகேஷ், பத்மினி, பாலையா, ரவிச்சந்திரன், குமாரி சச்சு நடிக்கும்

## எங்களுக்கும் காலம் வரும்

இப்பொழுது காட்சி தருகிறது

கெப்பிட்டல் (கொழும்பு)


ஜெமினி, வைஜயந்திமாலா, பத்மினி, தங்கவேலு வீரப்பா நடிக்கும்

## வஞ்சிக்கோட்டை வாலிபன்

(புதிய கொப்பி)

எமது தீபாவளி வெளியீடு

சிவாஜி, பத்மினி, கே. ஆர். விஜயா நடிக்கும்-



## பாலாடை


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969 வருடம் நவம்பர் மாதம் 1-ந் திகதி சனிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி 2341

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org